இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 21 ஜனவரி 2022 இதழ்:- 39

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com



இரு வேறு வெளியுறவுக் கொள்கை?



சீனாவின் உயிர் நண்பனான இலங்கைக்கு இந்தியாவின் நிதி உதவி

நழுவுகிறது சீனா?
கேணல் ஹரிஹரன்



GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

# சிங்கள மக்களின் விருப்பத்தைப் பிரதிபலித்த கோத்தாவின் கொள்கை விளக்கவுரை



2009 இல் இறுதிப் போரை நடத்திய இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இனப்பிரச்சனையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சனையாகச் சித்தரித்திருக்கும் நிலையில் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரிடம் கடிதம் (ஆவணம்) ஒன்றைக் கையளித்துள்ளது. பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்புவதற்காக நான்கு கூட்டங்களை நடத்தித் தயாரிக்கப்பட்ட கடிதமே 18ஜன 2022 செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.(9ம்பக்கம்)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

# கோத்தாவின் உரை வெறும் குப்பை! பஸிலிடம் சம்பந்தர் பாய்ச்சல்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

# புலிகள் தமிழைக் காதலித்தார்கள்!

## யாழ்.மாநகரசபையின் முத்தமிழ் விழாவில் கம்பவாரிதி

தமிழீழ விடுதலை புலிகள் தமிழை காதலித்ததனால் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கம்பன் விழாக்கள் வெகு விமர்சையாக நடந்ததாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் கூறியுள்ளார். யாழ்.மாநகரசபையின் ஒழுங்கமைப்பில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டார். இதன் போது கம்பவாரிதி மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் தமிழுக்கு பெயர் போன ஒரு பிரதேசம் மட்டுமல்லாது பல்துறை (5ம் பக்கம் பார்க்க)



BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

# அரசின் உள் முரண்பாடுகள் தேசிய அரசுக்கு வழி வகுக்குமா?

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
RE/MAX
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com




18 Years Real Estate Experience

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Keele/Finch

Toronto $499,900
Bedrooms: 2 Washrooms: 1
York University And New Lrt Line

### Driftwood/Finch


Toronto $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Fully Renovated, Brand New Kitchen


### Markham/Ellesmere


Scarborough $1,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout

### Don Mills/Sheppard


Scarborough $2,200
Bedrooms: 1+1 Washrooms: 2
615Sqft+176 Sqft, Open Concept

### Hwy 401/ Weston Rd

Toronto $799,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Beautifully Renovated Home

### Salem & Rossland Rd

Ajax $1,059,000
Bedrooms: 4 Washrooms: 3
Potential Sep.Entrance For Basement

### Grandview /Woodstream

Oshawa $1,549,900
Bedrooms: 4 Washrooms: 4
Over 3,322 Sq Ft, Open Concept

### Midland Ave & Danforth

Scarborough Call for Price
Bedrooms: 3+1 Washrooms: 3
Totally Renovated In 2017




YOU'RE INVITED TO
THE fourme VIP
PREVIEW EVENT

GET PRIORITY ACCESS TO THE MOST ANTICIPATED RELEASE OF 2021

BRAND NEW RELEASE
STARTING IN THE 500s
EXTENDED DEPOSIT STRUCTURE • ASSIGNMENT
CAPPED DEVELOPMENT FEES • LEASE DURING OCCUPANCY

1151 MARKHAM RD
FOURME SALES CENTRE
SUNDAY NOV 21ST / 10A-6P

TO RSVP, EMAIL, DM OR CALL ME

### Birchmount /Ellesmere

Scarborough Call for Price
Bedrooms: 2 Washrooms: 2
Renovated With High Quality

### Midland/Eglinton

Scarborough $419,000
Bedrooms: 3 Washrooms: 2
Bright Unit With A Balcony

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART
4A WADE AVE
TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு
மார்சே துர்க்கா
(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



**கியூபாவிற்கான சுற்றுலா**

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக
கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage)
உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து
நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி,
5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098



04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்

# இலங்கை தொடர்பில் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய தருணம் இதுவென பிரிட்டன் எம்.பி.கள் வலியுறுத்தல்

இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்பதுடன் அங்கு மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக நாம் போராட வேண்டியது அவசியமாகும். இவ்விடயத்தில் இலங்கை அதிகாரிகளைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கு மெக்னிற்ஸ்கி சட்டத்தின்கீழ் தடைகளை விதித்தல் உள்ளடங்கலாகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் இலங்கை தொடர்பில் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய தருணம் இதுவாகும் என்று பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

தைப்பொங்கல் பண்டிகையுடன் இணைந்ததாக பிரித்தானியப் பாராளுமன்றத்தினால் ஜனவரி மாதம் 'தமிழ் மரபுரிமை மாதமாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையினையும் கொண்டாடும் வகையிலேயே இந்த நிகழ்வு வெஸ்ட்மினிஸ்டர் நகரிலுள்ள மத்திய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

நிகழ்வை ஆரம்பித்து வைத்த பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவருமான எலியற் கொல்பர், கடந்தகால மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கான தனது உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தினார்.

அதேவேளை அங்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் டாவே, ஜனவரி மாதத்தை தமிழ் மரபுரிமை மாதமாகப் பிரகடனப் படுத்துவதற்கான முன்மொழிவை பிரித்தானிய பாராளுமன்றத்தில் தான் சமர்ப்பித்தமை குறித்து சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம் பெற்றது இனப்படுகொலை என்பதுடன் மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக நாம் போராடவேண்டும். இலங்கை தொடர்பில் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய தருணம் இதுவாகும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தத் தைப்பொங்கல் நிகழ்வில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சிறுவணிகங்கள் தொடர்பான அமைச்சருமான போல் ஸ்கல்லி பிரிட்டனின் ஒவ்வொரு துறையிலும் தமிழர்கள் மிகையான பங்களிப்பை வழங்கிவருகின்றார்கள். அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதே தைப்பொங்கல் பண்டிகையின் தாற்பரியமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி நிலை நாட்டப்படுவதுடன் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதற்கான அழுத்தத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை இலங்கைத் தமிழர்களுக்கான மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்பவை நிலைநாட்டப்படுவதை முன்னிறுத்திய பிரசாரம் மேலும் வலுவான முறையில் நடைபெறுவதைக் காண விரும்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாம் டெரி தெரிவித்தார்.

அத்தோடு 'இது விடயத்தில் தெளிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக மெக்னிற்ஸ்கி சட்டத்தின்கீழ் தடைவிதிக்கப்பட வேண்டும். எமது அரசாங்கத்தின் கீழ் மனித உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய அவர், என்றேனும் ஒருநாள் இராணுவமயமற்ற சுயநிர்ணய உரிமையுடனான தமிழர் தாயகத்தைக் காண்போம் என்றும் கூறினார்.

இலங்கையில் ராஜபக்ஷாக்களின் மீள்வருகை அனைவருக்குமான தீவின் எதிர்காலத்திற்குப் பாதகமானதாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வெஸ் ஸ்ரீட்டிங் சுட்டிக்காட்டிய அதேவேளை, தென்னாபிரிக்காவின் நிறவெறி கொள்கைக்கு எதிராகப் பொருளாதாரத்தடைகளை விதிக்குமாறுகோரி நான் போராடினேன்.

இப்போது இலங்கையின் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைவிதிக்கப்படவேண்டுமென வலியுறுத்துகின்றேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் லெமி குறிப்பிட்டார். அதன்படி அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் தொடர்பில் நீங்கள் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் டேவிட் லெமி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாணசபையின் 4 செயலாளர்கள் இடமாற்றம்



வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் நால்வருக்கு நேற்று 20 ஜன 2022 வியாழக்கிழமை முதல் உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் இந்த இடமாற்ற உத்தரவு புதன்கிழமை மாலை சம்பந்தப்பட்டவர்களுக்கு தொலைநகல் மூலம் அறிவிக்கப்பட்டது.

தற்போதைய கல்வி, சுகாதாரம்,பேரவை மற்றும் ஆளுநரின் செயலாளர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய தற்போதைய உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராகவும், ஆளுநரின் செயலாளர் திருமதி.சரஸ்வதி மேகநாதன் சுகாதாரஅமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தற்போதைய பேரவைச் செயலகத்தின் செயலாளர் எஸ்.குகநாதன் பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.


இதேவேளை, தற்போதைய சுகாதார அமைச்சின் செயலாளர் க.செந்தில்நந்தனன் பேரவைச் செயலகச் செயலாளராகவும் தற்போதைய கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அறிவித்தல் புதன்

மாலையே தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த இடமாற்ற உத்தரவு நேற்று வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544**



# கோத்தாவின் உரை வெறும் குப்பை! பஸிலிடம் சம்பந்தர் பாய்ச்சல்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரை வெறும் குப்பை. அதில் ஒன்றுமே இல்லை. இதை அப்படியே போய் ஜனாதிபதியிடம் கூறுங்கள். இவ்வாறு ஜனாதிபதியின் சகோதரரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்சவிடம் முகத்துக்கு நேரில் காட்டத்துடன் சீறி விழுந்து கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

9ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத் தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 18 ஜன 2022 காலை ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் அவர் ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பில் தகவல் வெளியிட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் சுமந்திரன் எம்.பி. மேலும் வெளியிட்ட தகவல்கள் வருமா ஜனாதிபதியின் பேச்சை செவிமடுத்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அதையொட்டி பெரும் கோபம் கொண்டார். பேச்சு முடிந்த கையோடே எழுந்து நாடாளுமன்றில் பகிரங்கமாகத் தம் எதிர்ப்பை பதிவு செய்ய அவர் விரும்பினார். அதற்காக எழுந்தார். எனினும் யோசித்தவர், நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி நடக்கக் கூடாது என்பதற்காக அப்படி கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார். ஆனால் நாடாளுமன்றை விட்டு வெளியே வரும்போது 'லொபி'யில் தமக்கு முன்னால் எதிர்ப்பட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் தமது கோபத்தை சம்பந்தன் ஐயா காட்டினார்.

ஜனாதிபதியின் இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவும் இல்லை. இதைப் போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்துக்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூற வேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக் கொண்டிருக்கின்றேன்.

இந்தப் பேச்சு வெறும் குப்பை தவிர வேறு எதுவுமில்லை என்பதை நான் கூறினேன் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள். எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்சினை குறித்து ஏதும் இந்தப் பேச்சில் சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படா விட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது. உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள் என்று சம்பந்தன் ஐயா சீற்றத்துடன் கூறினார்.

இந்தத் திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத பஸில் ராஜபக்ச விடயத்தைச் சமாளித்து, 'தாங்க்யூ, தாங்க்யூ...!' என்று கூறி அங்கிருந்து அகன்றார் என்று தகவல் வெளியிட்டார் சுமந்திரன் எம்.பி.

# கோத்தாவின் உரை மிகவும் மட்டரகப் பேச்சு!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இன்றைய கொள்கை விளக்கப் பிரகடன உரை மிகவும் மட்டரகமான பேச்சு. அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது அவர் இலங்கையைப் பற்றித் தான் பேசுகின்றாரா அல்லது வேறு ஏதேனும் நாட்டைப் பற்றிப் பேசுகின்றாரா என்ற சந்தேகம் எங்களுக்குள் எழுந்தது. ஒரு பிரச்சினையும் இல்லாத சுபீட்சமாக வீறுநடை போடுகின்ற ஒரு நாட்டைப் பற்றியே அவர் பேசுவது போல் இருந்தது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதியின் பேச்சில் தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தைதன்னும் இல்லை. அவர் சொன்னதெல்லாம் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்காலிகமாக வேனும் தங்கள் கொள்கைகளை ஒரு பக்கம் வைத்து விட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசுடன் கைகோர்க்க வேண்டும் என்பது தான்.

ஏன் கொள்கைகளை ஒரு பக்கத்தில் வைக்க வேண்டும்? இது எங்கள் கொள்கை இல்லை. மக்களின்



கொள்கை. அதற்கான ஆணையைக் கொடுத்தவர்கள் மக்கள் தான். அது அவர்களின் கொள்கை. நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக வந்ததே இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான். ஆகவே, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வது ஒன்று, கொள்கை வேறொன்று என்று இல்லை. மக்களின் கொள்கையைத் தான் பூர்த்தி செய்ய வேண்டும். அந்தக் கொள்கைகளை நாம் ஒரு பக்கத்தில் வைக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை. அந்த விடயம் கூட ஜனாதிபதிக்குப் புரிந்த மாதிரித் தெரியவில்லை என்றார் சுமந்திரன் எம்.பி.


இதேவேளை நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க பிரகடன நிகழ்வின் பின்னர் இடம்பெறும் சம்பிரதாயபூர்வ தேநீர் வைபவத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அடியோடு புறக்கணித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இன்று ஆற்றிய உரையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்த அர்த்தபூர்வமான விடயமும் இடம் பெறாமையால் அதை ஆட்சேபித்து இந்தத் தேநீர் விருந்து உபசாரத்தை நிராகரித்தனர் தமிழ்டீ தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

## ஜனாதிபதித் தேர்தலை

(6ம் பக்கத் தொடர்ச்சி) என குறிப்பிட்டுள்ளார். விசாரணைகள் குறித்து திருப்தியடையா விட்டால் கர்தினால் தனக்கு திருப்தியளிக்கும் விதத்தில் படையினரை விமர்சிக்கலாம் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.


அதிகாரிகள் குற்றவாளிகளிற்கு எதிரான ஆதாரங்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன்னால் சமர்பித்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் அரசாங்கத்தின் முன்னேற்றத்தை குலைப்பதற்கான சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களை நாங்கள் கையாள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

21 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
இரவு 7.00 மணிக்கு
ஐயப்பன் விசேட வைரவர் மடை
பூஜை நடைபெறும்.

31 ஜனவரி 2022 திங்கட்கிழமை
இரவு 7.00 மணிக்கு
அபிராமிப் பட்டர் விழா
உபயம்:- இராஜமுகுந்தன் சதுர்ஜன்

02 பெப்ரவரி 2022 புதன்கிழமை
(10வது வருடம்)
காலை 10.00 மணிக்கு
1008 சங்காபிஷேகம்

02 பெப்ரவரி 2022 புதன்கிழமை
(10வது வருடம்)
இரவு 7.00 மணிக்கு
திருவூஞ்சல் மணவாளக்கோலம்

உபயம்:- வெ.சதானந்தவடிவேல் குடும்பம்
சி.லிங்கராஜா குடும்பம்
சா.முரளி குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# விடுதலைப்புலிகள் தமிழைக் காதலித்தார்கள்!

## யாழ்.மாநகரசபையின் முத்தமிழ் விழாவில் கம்பவாரிதி

தமிழீழ விடுதலை புலிகள் தமிழை காதலித்ததனால் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கம்பன் விழாக்கள் வெகு விமர்சையாக நடந்ததாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் கூறியுள்ளார். யாழ்.மாநகரசபையின் ஒழுங்கமைப்பில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டார். இதன்போது கம்பவாரிதி மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் தமிழுக்கு பெயர் போன ஒரு பிரதேசம் மட்டுமல்லாது பல்துறை அறிஞர்களையும் பல்துறை மகான்களை உருவாக்கிய பெருமை யாழ்ப்பாண மண்ணுக்கு உரியது. இவ்வாறு பல பெருமைகளை தன்னகத்தே கொண்ட யாழ்மண் இன்றைய காலப் பகுதியில் பல தடுமாறல்களை எதிர்நோக்கி செல்வதாக அறிகிறேன்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மிகப்பெரிய தமிழ் விழாக்கள் மூன்றில் நான் பங்கெடுத்து அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ்.மாநகரசபை தமிழுக்கு பெருமை சேர்க்கும் முத்தமிழ் விழாவை ஏற்பாடு செய்தமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்த போது கம்பன் விழாக்களை வெகுவிமர்சையாக நடத்தினோம் அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழுக்காக வேறு எந்த விழாக்களும் பெரிய அளவில் நடத்தப்பட வில்லை. விடுதலைபுலிகளின் காலத்தில் கம்பன் விழா மக்கள் வெள்ளத்தால் நிறைந்த நிலையில் அவர்களும் தங்களுடைய சீருடையில் வருகை தந்து சிறப்பித் தார்கள்.

எனது நீண்டநாள் ஆதங்கம் மாநகரசபையின் முத்தமிழ் விழாவை காணும் போது அந்த ஆதங்கம் தீர்ந்து இருக்கிற நிலையில் இடைவிடாது தொடர்ந்து முத்தமிழ் விழா மக்கள் கூட்டத்தால் நிறைய வேண்டும் எனவும் அவர் கூறினார்.



தற்போது இடம் பெறும் தமிழ் விழாக்களுக்கு அரசியல்வாதிகளுக்கு அழைப்பு கொடுத்தால் மட்டுமே கலந்து கொள்கிறார்கள். நான் இளவயதில் இருந்த போது யாழ்ப்பாணத்தில் நடத்திய கம்பன் விழாவில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தை விழாவுக்கு அழைக்கவில்லை. அக்காலப்பகுதியில் கம்பன் விழா ஐந்து நாட்கள் நடைபெற்ற நிலையில் இறுதி மூன்று நாட்களும் அமிர்தலிங்கம் அழைக்காமலே தனது ஆதரவாளர்களுடன் வருகை தந்தார்.

ஆனால் அவர் வந்த முதல் இரு நாட்களும் அவரை நாங்கள் மேடையில் அமர்த்தவில்லை ஆதரவாளர்கள் எம்முடன் முரண்பட்டார்கள். இறுதிநாள் அவரை மேடையில் ஏற்றினோம். இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் அரசியல்வாதிகளை நாங்கள் விழாவுக்கு அழைப்பதில்லை நாம் அழைக்கா விட்டாலும் எமது விழாவில் இடம்பெற்ற தமிழ் கலை உணர்வு அவரை விழா இடத்திற்கு அழைத்து வந்தது.

ஆகவே இவ்வாறான விழாக்களை நடத்தும் போது அழைத்தவர்கள் தான் வர வேண்டும் என நினைக்காது அனைத்து தரப்பினர்களும் தமிழை வளர்ப்பதற்கு அணி திரண்டு வர வேண்டும் எனவும் கம்பவாரிதி ஜெயராஜ் தெரிவித்தார்.

# இலங்கையின் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வு காண இந்தியா 500 மில்லியன் டொலர் உதவி



இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா வழங்கியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை உறுதி செய்யும் வகையில் டெல்லி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிக்கு கடிதம் அனுப்பியுள்ளது. இலங்கையின் கோரிக்கைக்கு அமைய எரிப்பொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் இந்தியாவினால் கருதப்படும் திட்டங்கள் மற்றும் முதலீடுகள் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் மற்றும் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் கடந்த 15 ஆம் திகதி மெய் நிகர் ஊடாக விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

மறுப்புறம் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் கடந்த டிசெம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட டெல்லி விஜயத்தின் எதிர்பார்ப்புகளின் ஒன்றை நிறைவேற்றும் வகையிலேயே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் பேசும் கட்சிகளினால் இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள கூட்டு ஆவணம் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் கையளிக்கப்பட்டது.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்ப்படுத்த இந்தியா உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தி தமிழ் கட்சிகள் இணைந்து இந்த ஆவணத்தை தயாரித்துள்ளன. இதன்படி 18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை அந்த ஆவணம் இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய இல்லத்தில் இந்தியத் தூதுவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் தலைமையில் கையளிக்கப் பட்டது. இதன்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதியின் உரை ஆச்சரியமில்லை!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அக்கிராசன உரையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. அவர் சில விடயங்களை கூறுவாரென்று எதிர்பார்ப்புக்கள் நிலவின. அவ்வாறானவர்கள் ஏமாற்றமடைந்திருக்கின்றனர். ஆனால், தமிழர் தரப்பில் அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் இருக்கவில்லை. கூட்டமைப்பிடமும் அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பத்திலிருந்தே தேசிய இனப்பிரச்னை தொடர்பில் அமைதியாகவே இருந்து வருகின்றார். அவரைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு பொருளாதார பிரச்னைகள்தான் இருக்கின்றன. அவரது பதவியேற்பின் போதும் இவ்வாறானதோர் அபிப்பிராயத்தையே வெளியிட்டிருந்தார்.

அவர் முதலாவது வெளிநாட்டு விஜயமாக, இந்தியாவுக்கு சென்ற போதும் அங்கு ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, பொருளாதார பிரச்னையையே பதிலாக முன் வைத்திருந்தார்.

ஆனால், வடக்கு – கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பொருளாதாரப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின், அதற்கு முதலில் அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும். ஆகக் குறைந்தது, அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தையாவது, முழுமையாக அமுல்படுத்த வேண்டும். ஒரு மக்கள் கூட்டம் தங்களுக்கான அபிவிருத்தியை தீர்மானிக்கும் அதிகாரமிருந்தால் மட்டுமே, அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற முடியும்.

எனவே, ஜனாதிபதியின் உரை தமிழ் மக்களுக்கு ஏமாற்றமான ஒன்றென்று கூறினால் – அது தவறானது. ஏனெனில் ஜனாதிபதி கோட்டாபய அரசியல் தீர்வை வழங்குவார் என்னும் நம்பிக்கை எவரிடமும் இல்லை. இதன் காரணமாகவே, தமிழ் கட்சிகள் இந்திய பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றன.

அதேபோன்று அமெரிக்காவின் ஆதரவை கோருகின்றனர். யுத்தமில்லாத கடந்த பன்னிரெண்டு வருடங்களில், அரசாங்கத்தை நோக்கி தமிழர் தரப்புக்கள் சென்றதை விடவும் சர்வதேசத்தை நோக்கி சென்றது தான் அதிகம். ரணில் – மைத்திரி ஆட்சிக்காலம் இதில் ஒரு விதிவிலக்கு.

ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் சிங்கள மக்களின் வாக்கு வங்கியே பிரதானமானது. அதனை பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அது மட்டும்தான் அவர்களுக்கு முக்கியமானது. ஏனெனில், தமிழ் மக்கள் எக்காரணம் கொண்டும் ராஜபக்ஷக்களை ஆதரிக்கப் போவதில்லை. இந்த அடிப்படையில் சிந்தித்தால், சிங்கள மக்களை பொறுத்தவரையில், பொருளாதார சரிவு தான் ஒரேயொரு பிரச்னை. அதனை சரிசெய்து விட்டால், அதன் பின்னர், சரிந்த செல்வாக்கை மிகவும் குறுகிய காலத்தில் நிமிர்த்தி விட முடியும்.

ஒருவேளை ஜனாதிபதி அரசியல் தீர்வு தொடர்பில் பேசியிருந்தால் தான், தமிழர் தரப்புக்கள் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். எனவே கோட்டாபய ஏமாற்றிவிட்டார் என்று கூறினால் அது தவறானது. அவர் ஏமாற்றவில்லை. அவரது முன்னைய நிலைப்பாட்டை மீளவும் உரத்து பேசியிருக்கின்றார். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர், அரசியல் பிரச்னையென்று ஒன்றில்லை என்பதே அவர்களின் நிலைப்பாடு.


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# ஜனாதிபதித் தேர்தலை மனதில் வைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அமைதியின்மையை ஏற்படுத்த முயன்றனர்

ஜனாதிபதி தேர்தலை மனதில் வைத்து உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னர் அமைதியின்மையை ஏற்படுத்த முயன்றனர் என கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சாட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்க எவ்வாறு திட்டமிடப்பட்டது தாக்குதலை தடுக்க முயன்றவர்கள் எவ்வாறு தடுக்கப்பட்டனர் என்பது உட்பட பல விடயங்கள் விரைவில் தெரியவரும் என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மை வெளிவருவதை எவராலும் தடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். ஆண்டவன் உண்மையை வெளிப்படுத்துவதை எவராலும் தடுக்க முடியாது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சில சக்திகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றன என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை மனதில் வைத்தே இதனை செய்தார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் ரோ அமைப்பு வழங்கிய தகவல்களை சில உள் நோக்கம் கொண்ட சக்திகள் வேண்டுமென்றே அலட்சியம் செய்துள்ளன என்பதும் தெளிவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெறுவதை தடுப்பதற்கு சில அதிகாரிகள் முயன்றார்கள் ஆனால் அவர்கள் தடுக்கப்பட்டார்கள் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். பல வருடங்களாக நாட்டில் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன துப்பாக்கி பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன எரிகின்ற டயர்களிற்குள் மக்கள் வீசப்பட்டார்கள் என



தெரிவித்துள்ள கர்தினால் தங்களின் இவ்வாறான நடவடிக்கைகள் எல்லா நாளும் சகித்துக் கொள்ளப்படும் என ஆட்சியாளர்கள் கருதுகின்றார்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 74 வருடங்களாக நாட்டை ஆண்டவர்கள் அதனை ஆழமான புதை குழிக்குள் தள்ளி விட்டனர் என கர்தினால் தெரிவித்துள்ளார்.

### கர்தினாலின் மற்றுமோர் பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு கண்டு பிடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னால் சதி முயற்சியொன்று உள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பொலிஸார் இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை மேற் கொண்டுள்ள விதத்தினை கடுமையாக சாடியுள்ள கர்தினால் அதிகாரிகள் உண்மையை தெரிவிப்பதற்கு பதில் கட்டுக்கதைகளை வெளியிடுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

கைக்குண்டு மீட்கப்பட்ட தினத்தின் சிசிடிவி அதிகாரிகள் முழுமையாக ஆராயவில்லை பகல் மூன்று மணிமுதல் பதிவாகியுள்ள விடயங்களையே ஆராய்ந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். அவர்கள் அன்று காலை முதல் பதிவான விடயங்களை ஆராய வில்லை காலை முதல் சிசிடிவியில் பதிவான விடயங்களில் சந்தேகத்திற்கு இடமான விடயங்கள் உள்ளன எனவும் கர்தினால் தெரிவித்துள்ளார். காலையில் பதிவான சிசிடிவி காட்சிகளில் சந்தே கத்திற்கு இடமான விதத்தில் நபர் ஒருவர் செயற்படுவது பதிவாகியுள்ளது என கர்தினால் தெரிவித்துள்ளார். காலை 9.52 மணியளவில் சொப்பிங் பாக்குடன் நொண்டியபடி நபர் ஒருவர் தேவாலயத்திற்குள் நுழைகின்றார் அவர் சுற்றியுள்ள பகுதிகளை ஆராய்கின்றார் பின்னர் காலியாக உள்ள ஆசனத்தில் அமர்கின்றார்.என தெரிவித்துள்ள கத்தோலிக்கர்கள் தேவாயத்திற்குள் நுழையும் போது நடந்து கொள்வது போல அவர் சைன் ஒவ் குரொசினை செய்தார் ஆனால் அதனை பிழையாக செய்தார் என கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் அதனை செய்த விதத்தினை பார்க்கும் போது அவர் கத்தோலிக்கர் இல்லை என்பது தெளிவாக புரிகின் றது அவர் பிரார்த்தனையில் ஈடுபடவில்லை வாங்கின் நடுப்பகுதிக்கு அவர் செல்கின்றார், அவர் சுரூபத்தை நோக்கி செல்வதை காண முடிகின்றது அவர் குனிந்து எதனையோ எடுக்கின்றார் – அனேகமாக தனது கால்சட்டை பொக்கட்டிலிருந்து என கருத முடிகின்றது. அவரை கடந்து இன்னொரு நபர் பார்க்கும் போது இவர் சுற்றிலும் பார்த்து விட்டு அங்கிருந்து வெளியேறிச் செல்கின்றார் இந்த சம்பவம் காலை 9.52க்கு இடம் பெற்றுள்ளது என கர்தினால் தெரிவித்துள்ளார். சிசிடிவியில் காணப்படும் சந்தேகத்திற்குரிய நபர் குறித்து விசாரணை செய்யாமல் தேவாலயத்தினை சுத்திகரிப்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என கர்தினால் சாடியுள்ளார். உண்மையை கண்டு பிடிப்பதற்கு பதில் அவர்கள் கதையொன்றை திட்டமிட்டு பரப்புகின்றனர் என கர்தினால் தெரிவித்துள்ளார்.

### தேசத்திற்கு ஆபத்து இல்லை

கொழும்பு பொரளை தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட கைக்குண்டினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்திலை என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் முடிவடைவதற்கு சில காலம் எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார். கைக்குண்டினை தேவாலயத்தில் வைத்தவரை கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பதற்கு பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினருக்கு பல நாட்கள் அவசியம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களிற்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். பொதுமக்களிற்கு விசாரணைகள் குறித்த தகவல்கள் வழங்கப்படாத போதிலும் விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் விமர்சனங்கள் குறித்து பதிலளித்துள்ள பாதுகாப்பு செயலாளர் அந்த சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸார் நீண்டகால நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் அது பலனளிக்கும் (4ம் பக்கம் பார்க்க)

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

Tel: 416-524-0424

# பாராளுமன்றத்தில் தமிழ்மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படுமென ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருக்கையில் யாழ்.கட்டுவனில் நிலத்தை ஆக்கிரமித்து வீதி அமைக்கும் இராணுவத்தினர்!

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள தமிழ் மக்களின் நிலம் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றி சில மணி நேரத்தில் கட்டுவனில் தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து படையினர் வீதி அமைக்கின்றனர். இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் பொய் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்துகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற சம்பிரதாய உரையில் இந்த நாட்டின் ஜனாதிபதி நான்தான் என்பவர் கூறுகின்றார் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என. ஆனால், அன்றைய தினமே கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 400 மீற்றர் நீளமும் 26 மீற்றர் அகலமும் கொண்ட நிலத்தைக் கூட விடமாட்டோம் எனப் படையினர் அடாத்தாக வீதி அமைக்கின்றனர். அவ்வாறெனில் இந்த நாட்டிலே ஜனாதிபதியின் சொல்லைக்கூட மதிக்காத இராணுத்தினர் இருக்கின்றனர் எனத் தெரிகின்றது. படைத் தரப்பு அவசர அவசரமாக ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதியில் டோசர்கள், டிப்பர் வாகனங்கள் மூலம் வீதி அமைக்கின்றனர். அந்த வீதியமைப்பு தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை வாய் மூடியுள்ளது. சட்ட விரோதமாக அமைக்கப்படும் வீதி தொடர்பில் இதுவரை எந்த அதிகாரிகளும் வாய் திறக்காதமை யால் உரியவர்கள் வழக்குத் தாக்கல் செய்ய என்னை நாடுகின்றனர். இதுதான் இந்த நாட்டின் நிலைமை என்பதனை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இதேபோன்று கட்டுவனில் மக்களின் நிலத்தில் அமைக்கும் வீதி உடன் நிறுத்தப்படாவிட்டால் அந்த இடத்தில் படைகளிற்கு எதிராக போராடும் சூழல் ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். தமிழ் மக்களின் நிலம் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி நாடாளுமன்றில் கூறுகின்றார். மறுபக்கமோ கட்டுவன் மயிலிட்டி வீதியில் மக்களின் நிலத்தை அபகரித்து படையினர் வீதி அமைக்கின்றனர். இந்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பது ஜனாதிபதிக்கும் புரியவில்லை. இந்த நாட்டின் அரசியல் பிரச்சனை தொடர்பில் வாயே திறவாத ஜனாதிபதி பசப்பிற்காக மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என்றார் .

ஆனால் அதனைக் கூட இந்த ஜனாதிபதி செய்ய மாட்டார் என்பதனை அன்றைய தினமே கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 400 மீற்றர் நீளமும் 26 மீற்றர் அகலத்தை உடைய நிலத்தை விடமாட்டோம் என படையினர் அடத்தாக வீதி அமைக்கின்றனர். அவ்வாறானால் இந்த ஜனாதிபதியிடம் எதனை எதிர் பார்க்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

# சுடலை ஞானம் பிறந்து 13ஐ தூசி தட்டுகின்றனர் - டக்ளஸ் கிண்டல்



*13வது திருத்தச் சட்டத்தை தும்புத் தடியால் கூட தொட்டும் பார்க்க மாட்டோம் என்று நிராகரித்து விட்டு இன்று சுடலை ஞானத்தில் அதையே தூசி தட்டி இந்திய பிரதமருக்கு அனுப்பி வைத்தவர்கள் இன்னும் பல ஆண்டுகள் கழித்து ஜனாதிபதியின் இன்றைய கொள்கை பிரகடனங்களையும் தூசு தட்டி பார்க்கக்கூடும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் தெரிவித்தார்.*

பாராளுமன்றத்தில் 19 ஜனவரி 2022 புதன் கிழமை ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் தெரிவித்ததானது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் இந்த ஆண்டிற்கான ஆரம்ப உரை நாட்டு மக்களுக்கு ஒளி வீசும் நம்பிக்கைகளை விதைத்திருக்கிறது. வளர்ந்து வரும் நாடாகிய இலங்கைத்தீவு கொவிட் 19 காரணமாக எதிர்கொள்ளும் சவால்களை யதார்த்தமாக தனது உரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சக கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சுயங்களை ஜனாதிபதி அவர்கள் ஏற்றுக் கொண்டதும் தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேவைகள் தொடரும் என்ற அவரது பெருந்தன்மை மிக்க கூற்றுகளும் அவரது அரசியல் நிலைப்பாட்டை பறைசாற்றி நிற்கிறது.

ஜனாதிபதி தனது உரையில் இனவாதத்தை நிராகரிக்கின்றோம் என்றும் நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும், அவர்களது அனைத்து உரிமைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றும் திறந்த மனத்துடன் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து சக தமிழ் கட்சி தலைமைகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதன் அர்த்தத்தை புரிந்து கொண்டு அரசியல் தீர்வு குறித்து நம்பிக்கையோடு செயலாற்ற முன்வர வேண்டும். அது மட்டுமன்றி கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கோட்டாபய ராஜபக்ஷ அவர்களிடம் நாம் உரிமையோடும் தேசிய நல்லிணக்க ஒழுங்கு முறையிலும் முன்வைத்த விடயங்கள் குறித்தும் தனது உரையில் தெரிவித்துள்ளமை எமக்கு நம்பிக்கையை தருகின்றது.

காணாமல் போனோருக்கு நீதியும் பரிகாரமும் வழங்குவோம் என தெரிவித்துள்ளார். சிறையில் வாடும் கைதிகளை விடுவித்து வருவது குறித்து பேசியுள்ளார். அது மட்டுமன்றி யுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போது படையினரின் பயன்பாட்டில் இருந்த 90 வீதமான நிலங்களை விடுவிப்பதற்கு தான் முயற்சி எடுத்தமை குறித்து பேசியுள்ளார்.

இதில் எனது பங்கோடு பல்லாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்களை அவர் விடுவித்து தந்திருக்கிறார் என்பதை நான் கூறி வைக்க விரும்புகிறேன். இன்னமும் விடுவிக்கப்படாத நிலங்களை விடுவிப்பதாகவும் அவர் தனது உரையில் உறுதியளித்துள்ளார்.

அனைத்து மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை உருவாக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகள் குறித்தும் நியாமான முடிவுகளை எடுப்போம் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளை தனது உரையில் யதார்த்த பூர்வமாக தெரிவித்திருக்கும் ஜனாதிபதி வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் வேறுபாடுகளை தற்காலிகமாக தவிர்த்து விட்டு தான் எடுக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுள்ளார்.

உரையை முழுமையாக படித்து முடித்தார்களோ அல்லது செவி மடுத்தார்களோ தெரியாது. அதில் ஒன்றும் இல்லை என்றும் குப்பை என்றும் வழமை போல் கூச்சலிடத்தொடங்கி விட்டார்கள்.

*13வது திருத்த சட்டத்தை தும்புத் தடியால் கூட தொட்டும் பார்க்க மாட்டோம் என்று நிராகரித்து விட்டு இன்று சுடலை ஞானத்தில் அதையே தூசி தட்டி இந்திய பிரதமருக்கு அனுப்பி வைத்தவர்கள் இன்னும் பல ஆண்டுகள் கழித்து ஜனாதிபதியின் இன்றைய கொள்கை பிரகடனங்களையும் தூசு தட்டி பார்க்கக்கூடும். அரசியல் வேறுபாடுகளை ஒரு புறம் வைத்து விட்டு வாருங்கள் முன்னோக்கி செல்வோம் என்றுதான் ஜனாதிபதி அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.*

கொள்கையை ஒருபுறம் வைத்து விட்டு வாருங்கள் என்று கேட்டதாக அந்த உரையை திரிபு படுத்தி கூச்சலிடுவோர்களிடம் கேட்கிறேன். முண்டாட்சியில் உங்கள் கொள்கையை விற்று யாரிடம் எதை பெற்றீர்கள்? மக்களிடம் இருந்து நீங்கள் அபகரித்த ஆணைக்கு என்ன மதிப்பளிதீர்கள்? இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி அலையும் ஞானசூனியங்களாக இருப்பதில் அர்த்தமில்லை. கண்மூடித்தனமாக சுயலாப அரசியல் நடத்துவதை தவிர்க்க வேண்டும் என கேட்கிறேன். எள்ளை கொடுத்தால் எண்ணைதான் வேண்டும் என்று அடம் பிடிக்கும் அரசியல் சுயலாபங்களே தமிழ் மக்கள் மீது அவலங்களையும் அழிவு களையும் சுமத்தியிருக்கிறது சும்மா இருக்க சுதந்திரம் வந்து சேராது, சாத்தியமானதை ஏற்றுக் கொண்டு சாதித்துக் காட்டும் வல்லமையோடு பயணிக்க வேண்டும்.

ஆகவே ஜனாதிபதியின் உரையின் அர்த்தங்களை புரிந்து கொண்டு தமிழ் பேசும் மக்களின் வாழ்விலும் சுபீட்சமான ஒளி வீசும் காலத்தை உருவாக்க அனைத்து வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தயாராக வேண்டும் என நான் பகிரங்க அழைப்பு விடுக்கிறேன் என்று தெரிவித்தார்.

LAW OFFICE
of
THELMA WILLIAMS
Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE
❑ WILLS and ESTATES
❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW
❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
❑ தொழில்சார் சட்டம்
❑ நிர்வாக சட்டம்
❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை
Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் அணி?



தென்னிலங்கை அரசியல் களத்தில் புதிய அரசியல் அணியொன்று எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதியளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த அரசியல் அணியில் மையப்புள்ளியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநயக்க குமாரதுங்க இருக்கவுள்ளதோடு குமார் வெல்கம அர்ஜுண ரணதுங்க சுசில் பிரேமஜயந்தஜ அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் ஒருங்கிணைய வுள்ளனர்.

இந்த அணியானது குமார வெல்கம தலைமையில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசியல் கட்சியான புதிய லங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்தி பரந்து பட்ட கூட்டணியொன்றை அமைக்கும் வகையில் இந்த அணி செயற்படவுள்ளது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம தெரிவிக்கையில்

எமது கட்சியின் தலைமைக் காரியாலய த்தினை எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி பத்தரமுல்லையில் திறப்பதற்கு தீர்மானித்துள்ளோம். குறித்த நிகழ்வில் எமது கட்சியை மையப்படுத்திய பரந்து பட்ட அணியொன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

ஜனநாயகம் மனிதாபிமான பண்புகள் நிறைந்த அரசியல் கலாசாரமொன்றையும் அனைவரும் சமத்துவமாக வழும் அமைதியான சூழல் ஒன்றையும் கட்டியெழுப்புவதற்கு சமூகத்தினை வழி நடத்தக்கூடிய அரசியல் கட்சியொன்று அவசியமாகின்றது.

அந்த வெற்றிடத்தினைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே இப்புதிய அரசியல் கட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானித்துள்ளோம். இந்தக் கட்சியின் போசகராகவும் எம்மை வழி நடத்துபவராகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநயக்க செயற்படவுள்ளார். அத்துடன் அவருடைய வழிகாட்டலில் மாற்றத்தினை ஏற்படுத்துவதை நோக்கி நகரவுள்ளோம். இந்த நிகழ்விற்கு அனைத்து தலைவர் களையும் அழைப்பதற்கு தீர்மானித் துள்ளோம்.மேலும் எமது கொள்கை களையும் இலக்குகளையும் ஏற்றுக் கொள்பவர்கள் எம்முடன் இணைந்து பயணிப்பதற்கு முடியும். அவ்விதமான வர்களுக்காக எமது கதவுகள் திறந்தே இருக்கும். அண்மையில் சுசில் பிரேம ஜயந்தவுடனும் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டுள்ளேன். அதே நேரம் ஏனைய தலைவர்களையும் இணைத் துக் கொண்டு பயணிப்பதில் எமக்கு தயக்கங்கள் இல்லை.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் பங்காளியாக இருக்கின்றார். அவர் அதிலிருந்து வெளியேறி எம்முடன் இணைந்து கொள்வது பற்றி தீர்மானித்தால் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராகவே உள்ளோம் ஏனைய எதிரணிகளையும் இணைத்துப் பயணிப்பதற்கும் தயாரகவே உள்ளோம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம மேலும் தெரிவித்தார்.

# கனடாவின் அறிவிப்புக்கு இலங்கை அரசு கடும் அதிருப்தி!



இலங்கைக்கு பயணம் மேற்கொள்பவர்கள் இலங்கை எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என கனடா அறிவுரை வழங்கியுள்ளமை குறித்து இலங்கை அரசாங்கம் தனது அதிருப்தியை வெளியிடவுள்ளது.

இலங்கை அரசாங்கம் இராஜதந்திர வட்டாரங்கள் மூலமாக தனது அதிருப்தியை வெளியிடவுள்ளது.

கனடா இவ்வாறான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளமை நியாயமற்ற விடயம் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே இந்த விவகாரம் குறித்து கனடா தூதுவருடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் தனது தூதரகம் ஊடாகவும் அதிருப்தியை வெளியிடும் என தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு இது குறித்து உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை வெளியிடவுள்ளது.

இலங்கையில் மோசமடையும் பொருளாதார நிலைமை குறித்து தனது நாட்டிலிருந்து இலங்கை செல்பவர்களிற்கு கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கைக்கான பயண ஆலோசனையில் கனடா இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகள் உணவுகள் எரிபொருட்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என கனடா தெரிவித்துள்ளது.

பொருளாதார ஸ்திரதன்மை இன்மை சுகாதார சேவைகள் உட்பட பொதுச் சேவைகள் பாதிக்கப்படும் நிலைமையை ஏற்படுத்தலாம் என கனடா தெரிவித்துள்ளது.

பொருளாதார ஸ்திரதன்மை வளங்கள் குறைந்தளவில் கிடைக்கும் நிலையை ஏற்படுத்தலாம் பாதுகாப்பு நிலவரம் மோசமடையும் நிலையை ஏற்படுத்தலாம் எனவும் கனடா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு செல்பவர்கள் உணவு எரிபொருள் குடிநீர் போன்றவற்றை நீண்டகால குழப்பநிலை ஏற்படக்கூடிய ஆபத்தினை கருத்தில் கொண்டு போதியளவிற்கு தம்வசம் வைத்திருக்க வேண்டும் எனவும் கனடா கேட்டுக் கொண்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் எரிபொருள் நிலையங்கள் மருந்தகங்களில் நீண்ட வரிசைகளை எதிர் பார்க்க வேண்டிய நிலை காணப்படுகின்றது எனவும் கனடா தெரிவித்துள்ளது.

# அரசியல் தீர்வு பற்றிப் பேச ஜனாதிபதி அழைப்பு விடுப்பார்:- பொய்த்துப் போய் விட்டது என்கிறார் சலிப்புடன் மனோ

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்தை நடத்த தான் தயார் என்ற ஒரு நிலைப் பாட்டை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக ஒருசில



ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களிலும், ஒருசில தமிழ் அரசியல் தரப்புகளாலும் வெளியிடப்பட்ட ஊகங்கள் இன்று பொய்த்தன என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச அடுத்த மூன்று வருடங்களுக்கான தனது அரசாங்கத்தின் கொள்கை நோக்கை விளக்கி 18 ஜன 2022 பாராளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில் தேசிய இனப் பிரச்சினையை பொருளாதார பிரச்சினையாக மட்டுமே பார்க்கும் தனது கொள்கை மாறவில்லை என்பதை தெளிவாக கோடிட்டு காட்டினார். ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்ற பின் முன்னாள் எதிர்கட்சி தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் எம்பி மிகவும் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்ததை, அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த நான் அவருடன் சற்று உரையாடிய போது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக்கவலையை தந்தது.

ஜனாதிபதி இனப்பிரச்சினையை பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்க திட்டமிடும் டிஜிடல் தொழில்நுட்ப கேபிள்களை பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப் பிரச்சினையையும் அங்கே கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ என அவ்வேளை என்னுடன் உரையாடிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேலியாக தெரிவித்தார். என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரையை அடுத்து கருத்து கூறிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது, அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்தை நடத்த தான் தயார் என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக வெளியிடப்பட்ட ஊகங்கள் பொய்த்தன. கொழும்பின் ராஜதந்திர சமூகம் தவறாமல் வாசிக்கும் பிரபல வார இறுதி ஆங்கில பத்திரிக்கையின் அரசியல் ஆரூடம் பொய்த்தது.

அப்பத்திரிக்கை தனது ஏற்புடைமையை இழந்தது என்றும், அதை நம்பிய ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் ஏமாந்தனர் என்றும், சற்று முன் என்னுடன் உரையாடிய பிரபல மேற்கு நாட்டு ராஜதந்திரி சொன்னார்.

தேசிய இனப்பிரச்சிஜை இருப்பதாக ஏற்க ஜனாதிபதி தன் உரையில் தெளிவாக மறுக்கிறார். இந்நாட்டில் நிலவும் பிரச்சினைகளை பொருளாதார பிரச்சினையாக மட்டுமே அவர் இருக்கமாக பார்க்கிறார். மக்களுக்கு குடிநீர், நீர்பாசனம், வீடுகள், நெடுஞ்சாலைகள் ஆகிய வசதிகளை வழங்குவதே, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்பதுவே தனது அரசாங்கத்தின் நல்லிணக்க கொள்கை என ஜனாதிபதி கூறி முடித்தார்.

மலையக தமிழர்கள், முஸ்லிம் ஆகிய இலங்கையின் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகள் பற்றிய தீர்வுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவின் அடுத்த மூன்றாண்டுக்கான கொள்கை உரையில் எதுவும் கூறப்படவில்லை.

அதிகார பரவலாக்கல், 13ம் திருத்தம் ஆகிய விவகாரங்கள் பற்றி ஜனாதிபதி ஒரு வார்த்தையும் கூறாமல் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி உள்ளார் என நான் நினைக்கிறேன். வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தனது அரசினால் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு வட கிழக்கு பிரதேசங்களில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்பீக்கள் ஒத்துழைப் வழங்க வேண்டும் என் பதுவே அவரது அதிகபட்ச கோரிக்கையாக இருந்தது.

அதேவேளை தான் நியமித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத குழுவினால் எழுதப்படும் புதிய அரசியல் மைப்பிற்கான வரைபை தனது அமைச்சரவையில் சமர்பித்து, அதன்பின் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச கூறினார். இந்த புதிய அரசியலமைப்பு வரையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது கானல் நீராகவே இருக்கும் என்பதை ஜனாதிபதியின் உரை கோடிட்டு காட்டுவதாகவே நான் நினைக்கிறேன் என்றார்.

# சிங்கள மக்களின் விருப்பத்தைப் பிரதிபலித்த கோத்தாவின் கொள்கை விளக்கவுரை

கட்டுரையாளர்:
கொழும்பில் இருந்து
– அ.நிக்ஸன் –



2009 இல் இறுதிப் போரை நடத்திய இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இனப்பிரச்சனையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சனையாகச் சித்திரித்திருக்கும் நிலையில் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரிடம் கடிதம் (ஆவணம்) ஒன்றைக் கையளித்துள்ளது. பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்புவதற்காக நான்கு கூட்டங்களை நடத்தித் தயாரிக்கப்பட்ட கடிதமே 18 ஜன 2022 செவ்வாய்க் கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தி 13 இற்கு அப்பாலான அதிகாரப் பரவலாக்கத்தைக் கோருவதே கடிதத்தின் நோக்கம் என்று கூறப்பட்டாலும், கடிதத்தின் உள்ளடக்கத்தில் உள்ள உண்மையான விபரங்கள் எதுவும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கத்தில் நோர்வேயின் ஏற்பாட்டோடு சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த 2003 இல், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

அதுவும் ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சராக இருந்த அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் சென்றிருந்தபோது. அங்கே உரை நிகழ்த்தியிருந்த மகிந்த ராஜபக்ச ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலையை தென்பகுதிச் சிங்கள மக்களின் குசினிப் பிரச்சனையோடு ஒப்பிட்டுக் கேலியாகப் பேசியிருந்தார்.

அன்று மகிந்த ராஜபக்ச கூறிய குசினிப் பிரச்சனை போன்றே இன்று ஜனாதிபதியாகவுள்ள மகிந்தவினுடைய சகோதரரான கோட்டாபய ராஜபக்சவும் வெறுமனே பொருளாதாரப் பிரச்சனையாகச் சித்தரித்திருக்கிறார்.

மோடிக்கு அனுப்புவதற்கான கடிதத்தைத் தயாரிப்பதற்காகச் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான அணி கொழும்பு– யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நான்கு கூட்டங்களை நடத்தியிருந்த சூழலிலும், சட்டத்தரணி சுமந்திரன் தலைமையிலான அணி அமெரிக்காவுக்குச் சென்று பேச்சு நடத்திய நிலையிலும் ஈழத்தமிழர் விவகாரத்தை பொருளாதாரப் பிரச்சனையாகச் சித்தரித்திருக்கிறார் கோட்டாபய ராஜபக்ச.

அதுவும் தனது ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சி அரசாங்கத்தின் இரண்டாவது கொள்கை விளக்கவுரையிலேயே இவ்வாறு கூறியிருக்கிறார். இந்த உரையை கோட்டாபய ராஜபக்ச நிகழ்த்திய போது நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கலரியில் கொழும்பில் உள்ள அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகள் உட்பட வெளிநாட்டு இராஜதந்திரிகள், உயர் அதிகாரிகள் எனப் பலரும் இருந்திருக்கிறார்கள்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியிருக்கும் அந்நியச் செலவாணி நெருக்கடியைக் குறைக்க இந்தியா ஆயிரத்து தொள்ளாயிரம் மில்லியன் டொலர்களை வழங்க உறுதியளித்து உடனடியாகவே ஒரு பில்லியன் டொலர்களை வழங்கவும் இணங்கியுள்ளது.

பதிலாக இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ் பேசும் மக்களின் தாயகமான திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடம் கையளிக்கும் ஒப்பந்தம் சென்ற ஆறாம் திகதி இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுமுள்ளது.

நிதியைப் பெற்றுப் பதிலாக வடக்குக் கிழக்கு மற்றும் தென்பகுதியில் முக்கிய வளமுள்ள பிரதேசங்களை அமெரிக்க ஒத்துழைப்புடன் இந்தியா பெற்றாலும், மேலும் மேலும் நிதியைத் தாருங்கள் இல்லையேல் சீனாவிடம் இலங்கை முழுமையாகச் சென்று



விடும் என்ற அச்சுறுத்தலையே இலங்கை காலம் காலமாக விடுக்கின்றது என்பது கண்கூடு. 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்ற போது, விடுதலைப் புலிகளை ஒழிக்க ஒத்துழையுங்கள் பின்னர் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படுமென அமெரிக்க இந்திய அரசுகளிடம் இலங்கை வாக்குறுதி வழங்கியிருந்தது.

இலங்கையின் அந்த வாக்குறுதியை நம்பி அப்போது கொழும்பில் இருந்த அமெரிக்க, இந்திய தூதுவர்கள் இரா. சம்பந்தனை நேரில் சந்தித்து புலிகளை ஒழித்த பின்னர் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படுமென உறுதியளித்திருக்கின்றனர். அந்த உறுதிமொழியை சம்பந்தனும் அன்று நம்பியிருக்கின்றார். ஆனால் தான் இவ்வாறு நம்பி ஏமாந்த கதையைச் சம்பந்தன் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதம் ஒன்றில் பகிரங்கமாகவே வெளிப்படுத்திக் கவலைப்பட்டுமிருந்தார்.

அமெரிக்க இந்திய அரசுகளை நம்பினேன். ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான பத்து ஆண்டுகள் சென்றுவிட்ட நிலையிலும் நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தர அமெரிக்காவும் இந்தியாவும் எதுவுமே செய்யவில்லையெனச் சுட்டிக் காட்டினார்.

இதேபோன்று இன்று கோட்டாபய ராஜபக்ச நிகழ்த்திய கொள்கை விளக்கவுரையில் அரசியல் தீர்வுக்கான ஏதாவது கருத்துக்கள் வெளிப்படும் என்று சம்பந்தன் நம்பியிருந்திருக்க வேண்டும். ஏனெனில் மோடிக்கு அனுப்பவுள்ள கடிதத் தயாரிப்பின் பின்னணியில் கோட்டாபய ராஜபக்ச நிச்சயமாக ஏதேனும் கருத்திடுவார் என்று சம்பந்தன் நம்பியிருக்கின்றார்.

சுமந்திரன் அணியின் அமெரிக்கப் பயணத்தின் எதிரொலியும் கொள்கை விளக்கவுரையில் ஏதாவது தாக்கத்தைச் செலுத்தும் என்றும் சம்பந்தன் எதிர்பார்த்திருக்க வாய்ப்புண்டு.

2009இல் அமெரிக்க– இந்திய அரசுகளின் வாக்குறுதிகளை நம்பியது போன்று 2021 இலும் அமெரிக்க இந்திய அரசுகளின் உறுதிமொழியின் அடிப்படையிலேயே செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன் என்ற இரு அணிகளின் செயற்பாடுகள் அமைந்தன.

அதன் பின்னணியில் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவும் இருந்ததாகக் கருதப்பட்டு வரும் நிலையில், கொள்கை விளக்கவுரையில் அவை பிரதிபலித்திருக்கலாம் என்று சம்பந்தன் ஆவலோடு காத்திருந்திருக்கலாம். அதனாலே தான், கோட்டாபயவின் உரையில் எதுவுமே இல்லையென்றவுடன் பசில் ராஜபக்சவோடு சம்பந்தன் சீறிப் பாய்ந்திருக்கிறார். உரை வெறும் குப்பை என்றும் ஆவேசமாகத் திட்டியிருக்கிறார்.

ஆத்திரம் மேலோங்கிய நிலையில், நாடாளுமன்ற விருந்தினர் விடுதிக்குச் செல்லும் வாசலில் நின்று பசில் ராஜபக்சவுடன் தர்க்கப்பட்டுமுள்ளார். ஆனால் பசில் ராஜபக்ச அமைதியாகவே நின்றதாக நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் பீரிஸஜீம் எதுவுமே பேசாமல் வாசலில் நின்ற சம்பந்தனைக் கடந்து சென்றிருக்கிறார்.

இந்தவொரு சூழலில், ஜனாதிபதி இனப்பிரச்சனை பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல் கடலுக்கு அடியில் அமைக்க திட்டமிடும் டிஜிட்டல் தொழில்நுட்ப கேபிள்களைப் பற்றியே அதிகம் பேசினார் என்றும் உங்கள் இனப்பிரச்சனையையும் கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ' எனவும் தன்னுடன் உரையாடிய ரணில் விக்கிரமசிங்க கேலியாகக் கூறினாரென மனோ கணேசன் முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ஆனால் சர்வதேச அரங்கில் நோர்வேயின் ஏற்பாட்டுடன் சமாதானப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தவொரு சூழலில், தான் பிரதமராக இருந்து கொண்டு தன்னுடைய கட்சி உறுப்பினரான மகேஸ்வரனுடன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்சவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி, தென்பகுதிச் சிங்கள மக்களின் குசினிப் பிரச்சனை தான் தமிழர்களின் பிரச்சனையும் என்று சொல்லவைத்தவர் தான் ரணில் விக்கிரமசிங்க.

ஆகவே கோட்டாபய ராஜபக்ச தமிழர்களின் பிரச்சனையை கடலுக்குக் அடியில் புதைக்க போகிறாரோ என்று ரணில் விக்கிரமசிங்க மனோ கணேசனிடம் சொல்லியிருப்பது வேடிக்கை.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாசா மற்றும் சந்திரிகா போன்ற சிங்கள அரசியல் தலைவர்கள் எவருமே இனப் பிரச்சனைத் தீர்வு விவகாரத்தில் நேர்மையுடன் செயற்படவில்லை என்பதை வரலாறு சொல்லும். குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகச் செயல் இழக்க வைத்த பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவையே சாரும்.

வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் சிலை வைத்தல், புத்த விகாரை கட்டுதல், மற்றும் காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் அனைத்தும் 2015 இல் மைத்திரி– ரணில் அரசாங்கத்தில் கொழும்பை மையப்படுத்திய திணைக் களங்களினாலேயே மேற் கொள்ளப் பட்டன.

அதாவது தமிழர்களின் மரபுரிமைகளை அழிப்பதற்காக முன்னர் இராணுவத்தைப் பயன்படுத்திச் செய்த அத்தனை வேலைகளையும் 2015 இல் இருந்து பொலிஸாரின் ஒத்துழைப்போடு ஒற்றையாட்சி அரசின் திணைக் களங்கள் முன்னெடுத்திருந்தன.

அத்துடன் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராகவுள்ள சஜித் பிரேமதாச 2015இல் ரணில் அரசாங்கத்தில் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது பௌத்த மரபுரிமைகளைத் தமிழ் மக்களுக்கு அமைத்துக் கொடுத்த வீடமைப்புத் திட்டங்களில் பதித்திருந்தார்.

இந்த அணுகுமுறைகளையே 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் பதவிக்கு வந்த ராஜபக்ச அரசாங்கமும் வடக்குக் கிழக்கில் மேற் கொண்டு வருகின்றது.

ஆகவே சிங்கள மக்களும் சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் பௌத்த குருமாரும் விரும்புவதையே கோட்டாபய ராஜபக்ச தனது கொள்கை விளக்கவுரையில் எடுத்துரைத்திருக்கிறார் என்ற முடிவுக்கு வரலாம்.



இதில் ஆச்சரியப்படுவதற்கோ சம்பந்தன் ஆத்திரமடைவதற்கோ எதுவுமே யில்லை.

மாறாகச் சாதாரண கட்சி அரசியலுக்கு அப்பால், ஈழத்தமிழர்கள் ஒருமித்த குரலோடு இன அழிப்பு விசாரணை என்றும், வடக்குக் கிழக்கு இணைப்புடன் கூடிய சுயாட்சிக் கட்டமைப்பே நிரந்த அரசியல் தீர்வு எனவும் தொடராக வலியுறுத்த வேண்டும்.

கீழுறங்கிப் போகும் கோரிக்கைகளினாலேயே தமிழர்களின் இறைமையும் சுயமரியாதையும் கேள்விக்கு உள்ளாகும் அவலம் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


15 ஜனவரி 2022 முதல் 21 ஜனவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 31ம் நாள் நினைவஞ்சலி



### பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த சப்பிரகமுவ பல்கலைக்கழகப் தமிழ்ப்பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது 31ம் நாள் நினைவு நாளுக்காக 15 ஜனவரி 2022 சனிக்கிழமை அன்னாரது சகோதரங்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கினார்கள். பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 86வது பிறந்தநாள் நினைவாக



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தும்பலையை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் 86வது பிறந்தநாள் 22 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்தநாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகம் இரத்தின வடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 26 ஜனவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 14வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஹீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஹீபதி அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஞானாம்பிகை ஹீபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லத்துரை

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.மத்திய கபே உரிமையாளர் அமரர் திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 8வது ஆண்டு நினைவு நாள் 23 ஜனவரி 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**மின்னஞ்சல் முகவரி:- Eelanadu.ca**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கண்ணன் வத்சலா தம்பதிகளின் செல்வப்புதல்வி டிபிக்கா கண்ணனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி டிபிக்கா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




15 ஜனவரி 2022 சனிக்கிழமை நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த சப்பிரகமுவ பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது 31ம் நாள் நினைவுநாள் நினைவாக அன்னாரது சகோதரங்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடா வாட்டர்லூ பல்கலைக்கழக மாணவி செல்வி அபிநயா சண்முகநாதன் அவர்களது ஏழாவதுஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்களும் சகோதரங்களும் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




18 ஜனவரி 2022 செவ்ாய்க்கிழமை தைப்பூசத் திருநாளாகும். அன்றையதினம் கனடாவில் வசிக்கும் செல்வி கீர்த்தனா ஜெயகணேசா அவர்கள் தைப்பூச நன்நாள் உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.

## 21வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சயனின் 21வது பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2022 வியாழக் கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அகவை இருபத்தியொன்று காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந் தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 7வது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
01.08.1927



அம்பாள் திருவடியில்
07.03.2014

நயினாதீவைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த

### திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்கள்

அம்மா! ஆண்டுகள் ஏழ கடந்தாலும் - மறையாது
எங்கள் கண்ணுக்குள் உங்கள் உருவம் - கணப்பொழுதும்
உங்களையே எண்ணி எண்ணி ஏங்கித் துடிக்கின்றோம்!
அன்னை நாகபூஷணியால் திருவடியில் ஆனந்தமாய் வாழ்வீர்களாக!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அகலுமா எங்கள் துயரம்?
நிலைவலையாய் உங்கள் நினைவு - என்றும்
எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும்!
ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்

தகவல்:- குலம் (மகன்) 647 677 8418

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2021 செவ்வாய்க்கிழமை முதல் 21-01-2022 வெள்ளிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் ரோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக மாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும். அடியார்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகை தரும் போது கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**குருமாற்றம் மஹாயாகம்** - 13-11-2021 சனிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் காலை 11.00 மணிவரை பூசைகள் நடைபெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2021 திங்கட்கிழமை
மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2021
செவ்வாய்க்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
26-11-2021 வெள்ளிக்கிழமை, 27.11.2021 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 29-11-2021 திங்கட்கிழமை
காலை 9.00 முதல் மதியம் 12.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
03.12.2021 வெள்ளிக்கிழமை, 04.122.2021 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 12-12-2021
ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப சாந்தி** - 19-12-2021
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்**
25-12-2021 சனிக்கிழமை, 26-12-2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணிமுதல் மாலை 5:00 மணி வரை இடம் பெறும்.


**நெய் அபிஷேகம்**
27-12-2021 திங்கட்கிழமை, 28.12.2021 செவ்வாய்க்கிழமை
அதிகாலை 4.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
01.01.2022 - 02.01.2022 (சனி - ஞாயிறு ஆகிய இரு தினங்களும் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2022 சனிக்கிழமை முதல் 14-01-2022 வெள்ளிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2022 வெள்ளிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2022 வெள்ளிக்கிழமை மாலை
6.00 மணிக்கு இடம் பெறும்.



### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடக்க வேண்டும்.
2. மாலை அணிதல் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.
3. கோவிற்19 சுகாதார விதிகளுக்கு அமைவாக மாலை அணிதல் இடம் பெறும்.
4. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
5. இவ்வருடம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளுவதில்லை.
6. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



**ontario.ca/covid19** -ஐ சென்று பாருங்கள்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


# 28th Anniversary



## Mr.Muthuthamby Perairavar

(Emeritus Principal ,Manipay Hindu College)

### Excerpts From his Memo Pad:

1.Manipay Hindu College was built on the Hindu Saiva vision of Thiru moolar.On the first day I joined the school,I saw in the asembly Hall,a picture if Lord Nataraja and the saiva saints singing praises of the Dance. At that time I never knew that my first step was my last step too – that the Dance contained for me the message of my Life. Life is an opportunity for a soul to learn,grow,evolve,mature,through the learning process called Panchakrithiya to its Ultimate fulfilment and Freedom.

I learnt English and Latin in my hectic school days,instead of Tamil and Hinduism.Colonial education forced me to make this choice.If such an identity crisis could happen to me in my homeland,due to foreign rule,how much more likely and real the possibility for a Tamil child living in a foreign country.My family and my college saved me.Ultimately the inner Dance triumphed.

It is the sacred duty of all parents to pass on atleast a little of our ancient heritage to our children here and save them from a sad identity crisis and its ill effects.
Sixty years of reading English did not make me a black Englishman. I am proud to be a Tamil Hindu Marxist. ( Religion for inside cleaning and Marxism for outside cleaning, I said this in 1954 )

### 2.At the MHC,OSA.

I have come here as an Alumni.Forget that I was a principal or teacher- that is past history.Old boy is green as my heart,ever young,a child,a boy.
I appeal to that ,not to the head that is bloody,diverse,and egoistic.MHC created me

If we trust each other we grow.If we distrust each other,we fight and destroy each other.We feel good because,everything you see in the other is also inside you.Be true to yourself and not to a set of rules.Else you end up an empty shell.A coat- no person in it.
We can do so many big things.Let us be humble,sensible,and not controversial.We have strong feelings and ideologies about things. But this is about MHC ….
Centre of Education should be the Heart,not the Head.Heart responds to life more than the Head.Life is a flowing river,not stratified Dogma or Theory …

3.Mind can deal only with horizontal time,love is formed in vertical time. Our minds think,not feel.A realised man lives in the present in his essence.
**If you live in the head and by the head –enemies win**
**If you live in the head and by the heart – I win**
…Guru's grace is needed.With Guru's help the heart is strengthened and head is weakened.Alone impossible.
Like me seek a Guru. Shiva becomes Guru to save us.You cannot measure Him via book knowledge- Head
Today people are religious,but unspiritual as a lump of clay- miss the inner reality,inner magic.You can debate that question. But we need spirituality….

It is possible to become more energetic, alive, and beautiful,as we get older,if we live in the Light.
We can choose our death

### 4.His words on the night before,with his hand on the heart

'I can feel the Dance of Life- it is enjoyable,it is beautiful'
You can experience the Dance of Life – it is enjoyable

### His last writing on his memo pad

''… Countdown time….
My breath tells me that. It is half a breath now,very soon it will be quarter.Every breath is a vote of thanks to God.''
5.World is a stage,you are the witness to the evolution of your soul-graduation cere mony into immortality – **the last day of your journey.**
**-Jan 20th 1994 Friday 4.00 a.m**

# பொங்கல் பொதியோடு வந்தீரோ தம்பி?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –


கடந்த 11 ஜனவரி 2022 செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேம தாச ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தி யிருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணிக்கு ஆதரவான தொழில்சார் வல்லுநர்களுக்கான தேசிய அமைப்பும் புத்திஜீவிகள் மன்றமும் மேற்படி சந்தி ப்பை ஒழுங்குபடுத்தியிருந்தன. யாழ்ப் பாணத்தில் உள்ள டில்கோ உல்லாச விடுதியில் இரவு உணவுடன் நடந்த அச்சந்திப்பில் புத்திஜீவிகள் மன்றத் தைச் சேர்ந்த பேராதனை பல்கலைக் கழகத்துப் புலமையாளர்கள் பங்கு பற்றினார்கள். அவர்களுடைய நண்பர் களான யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையைச் சேர்ந்த புலமையாளர்களும் அதில் பங்கு பற்றி னார்கள்

சஜித் பிரேமதாச தற்போதுள்ள பொரு ளாதார நெருக்கடிகளை முன்னிறுத் தியே முதலில் உரையாடினார். ஐக்கிய மக்கள் சக்தியை அவர் ஒரு புதிய கூட்டணியாக ஒரு புதிய தொடக்கமாக உருவகித்தார். அங்கு கூடியிருந்தவர் களில் ஒருவர் இனப் பிரச்சினைக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்வு என்ன என்று கேட்ட போது சஜித் 13வது திருத்தத்தை முன்வைத்தார்.

13வது திருத்தம் தோல்வியுற்று விட் டது என்பதனை யாழ் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறையைச் சேர்ந்த ஒரு புலமையாளர் சுட்டிக் காட்டியிருக்கிறார். தமிழ் மக்கள் 13ஐக் கடந்து சமஸ்டி போன்ற தீர்வு முன் மொழிவுகளை மேசையில் வைத்து விட்டார்கள். என்று மேற்படி புலமை யாளர் சுட்டிக்காட்டிய போது இனங் களுக்கிடையே நம்பிக்கையின்மை தான் பிரச்சினைகளுக்கு காரணம் என் றும் அந்த நம்பிக்கையை கட்டியெழு ப்பினால் சரி என்றும் சஜித் கூறியிருக் கிறார்.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத் தைக் கட்டியெழுப்புவதே இனப்பிரச் சினைக்கான தீர்வு என்றும் வலியுறு த்தியுள்ளார். உரையாடலின் போக்கில் அவர் 13ஆவது திருத்தத்தை பற்றித் தெரிவித்த கருத்துக்களைத் தொகு த்துப் பார்த்தால் நாட்டின் எல்லா பகுதி களுக்கும் உரிய பொருளாதாரப் பிரச்ச னைகளை தீர்ப்பதற்குரிய ஒரு வழி யாக அதை அவர் முன்வைப்பதாகத் தெரிகிறது என்று அச்சந்திப்பில் பங்கு பற்றிய ஒருவர் கூறினார்.

இதற்கும் சில கிழமைகளுக்கு முன்பு சம்பிக்க ரணவக்க வடபகுதிக்கு வந்திருந்தார். கிளிநொச்சியில் கைக் கடக்கமான ஆட்களோடு நடந்த ஒரு தேனீர் சந்திப்பில் அவர் கூறியிருக் கிறார் சமஸ்டி என்ற சொல் சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த கூடியது என்று. ஆனால் ஒரு சமஸ்டி தீர்வை தான் ஏற்றுக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார். சமஸ்டி என்று தலை ப்பு வைக்காமல் ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கலாம் என்ற தொனிப் பட கருத்துக் கூறியுள்ளார்.

அவர் வருவதற்கு சில கிழமைகளு க்கு முன்பு உதய கமன்பில யாழ்ப் பாணத்துக்கு வந்திருந்தார். கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய நிகழ்வுகளை மறக்க முடியா விட்டா லும் அவற்றை மறந்து அவற்றிற்கு மன்னிப்புக் கொடுத்து தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடி யும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

சஜித் பிரேமதாச உதய கம்மன்பில, சம்பிக்க ரணவக்க அனுரகுமார திஸா நாயக்க போன்றோர் ராஜபக்சேவுக்கு எதிராக முன்னிறுத்தப்படக் கூடிய எதிர்த்தரப்பு ஆளுமைகளாக பார்க்கப் படுகிறார்கள். ஆனால் அவர்களிடம் ராஜபக்சவுக்கு எதிராக மூவினத்து மக்கள் ஆணையைப் பெறத்தக்க வழி வரைபடங்கள் எவையும் கிடையாது என்பதைத் தான் இனப்பிரச்சினை தொடர்பான அவர்களுடைய தீர்வுகள் நமக்கு காட்டுகின்றன. சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தை பகைத்துக்



கொண்டு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை தர அவர்கள் தயாரில்லை. அதற்காக சிங்கள வாக்காளர்கள் மத்தி யில் இறங்கி வேலை செய்யவும் அவர் கள் தயாரில்லை. எனவே அவர்களால் ராஜபக்சக்களுக்கு எதிராக நின்று பிடிக்க முடியுமா என்பது சந்தேகம் தான். ராஜபக்சக்கள் அடுத்த முறையும் ஜனாதிபதியாக வருவது பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி தெரி வித்த ஒரு கருத்தை இங்கு கவனிக்க வேண்டும்... "நான் கொவிட்டினால் இழந்த இரண்டு வருடங்களை சர்வ ஜன வாக்கெடுப்பின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என பொது மக்களிடமிருந்து எனக்கு வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது......கண் டியை சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்த யோசனையை முன்வைத்துள் ளார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கண்டி தலதாமாளிகைக்கு வழிபாட்டிற் காக சென்றவேளை நான் மக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவ் வேளை இளைஞர் ஒருவர் முன்வந்து சேர் நீங்கள் கொவிட்டினால் இரண்டு வருடங்களை இழந்துள்ளீர்கள் சர்வ ஜன வாக்கெடுப்பின் மூலம் ஏன் அதனை பெற்றுக்கொள்ள முடியாது என்று கேட்டார் என்று ஜனாதிபதி தெரி வித்துள்ளார்.

அதாவது நாடு இப்பொழுது எதிர் கொள்ளும் நெருக்கடிகளுக்கான பழியை வைரஸின் மீது போட்டுவிட்டு மீண்டும் ஒரு ஆட்சிக்காலத்தை பெறு வதற்கு கோத்தாபய தயாரகி வரு கிறாரா? என்று அவரை எதிர்ப்பவர்கள் சந்தேகிக்கிறார்கள். ஜெயவர்த்தன செய் ததைப் போல ஒரு பொதுசன வாக்கெ டுப்பை நடத்தி அவர் தன்னுடைய ஆட்சிக் காலத்தை நீடித்துக் கொள்ள லாம் என்றும் தென்னிலங்கையில் ஊகிக்கப்படுகிறது.

நாடு இப்பொழுது எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை சமாளித்து விட்டு அதன் பின் சீனாவிடமிருந்து உதவியை பெற்று பொருளாதாரத்தை நிமிர்த்தி விட்டால் மக்கள் தாங்கள் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் மறந்து விடுவார்கள் என்று ராஜபக்ச க்கள் எதிர்பார்க்கிறார்களா?

அந்த அடிப்படையில் அடுத்த தேர்தலை நோக்கி அவர்களிடம் ஏதோ ஒரு திட்டம் இருக்கக்கூடும் என்ற ஒரு விளக்கமும் ஒரு பகுதி விமர் சகர்களால் முன் வைக்கப்படுகிறது. இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சிறியது. சீனா போன்ற ஒரு பெரிய நாடு உதவுமாக இருந்தால் இலங்கை த்தீவு வெகு சுலபமாக பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நிமிர்ந்து விடும். எனவே கோத்தாபய ராஜபக்ச தன்னுடைய அடுத்த பதவி காலத்தி லும் கண் வைத்திருப்பதாக ஊகிக்கப் படுகிறது. இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் எதிர்க்கட்சிகள் மேலும் துடிப் பாகவும் ஒன்று திரண்டும் செய்யப்பட வேண்டி இருக்கிறது. ஆனால் அண்மை வாரங்களாக வடக்குக்கு வருகை தந்த தென்னிலங்கைத் தலை வர்கள் தெரிவிக்கும் தகவல்களை தொகுத்துப் பார்த்தால் மூன்று இனத்த வர்களையும் கவரத்தக்க ஜனவசியம் எதிர்க் கட்சித் தலைவர்கள் மத்தியில் பெரும்பாலானவர்களுக்கு இல்லை என்று தெரிகிறது.





இனப்பிரச்சினைக்கு துணிச்சலான ஒரு தீர்வை முன் வைத்து அதற்காக சிங்கள மக்கள் மத்தியில் ரிஸ்க் எடுத்து உழைக்க தயாரற்ற எல்லா சிங்கள தலைவர்களும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தை ஏதோ ஒரு விதத்தில் பாதுகாப்பவர்கள் தான். சிங்கள பௌத்த பெருந்தேசிய வாத த்தை பாதுகாப்பதுதான் அவர்களு டைய அரசியல் இலக்கு என்றால் அவர்களால் ராஜபக்சக்களை எதிர் கொள்வது கடினம்.

ஏனென்றால் சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதத்தின் 2009க்கு பின்னரான வளர்ச்சிதான் யுத்த வெற்றி வாதமாகும். 2018 ஈஸ்டர் குண்டு வெடிப்போடு அது தன்னை அடுத்த கட்டத்துக்கு முஸ்லீம்களுக்கு எதிரானதாகவும் அப்டேட் செய்து விட்டது. எனவே யுத்த வெற்றி வாதத்தை எதிர்கொள்வ தற்கு ஒப்பீட்டளவில் மூன்று இனத்த வரின் வாக்குகளையும் கவரத்தக்க ஒரு தலைவர் தேவை.

தனிச் சிங்கள வாக்குகளால் அதை சாதிக்க முடியாது. அதை நன்கு விள ங்கி வைத்திருக்கும் காரணத்தால்தான் சஜித்தும் உதய கமன்பிலவும் சம்பிக்க ரணவக்கவும் வடக்கை நோக்கி வரு கிறார்கள். சரிக்கும் பிழைக்கும் அப் பால் ரணில் விக்கிரமசிங்க 2015இல் அப்படி ஒரு தலைவராக தோன்றினார். ஆனால் அவர் தானும் தோற்று தான் பெற்றெடுத்த குழந்தையான நிலை மாறுகால நீதியையும் தோற்கடித்து விட்டார்

இப்பொழுது சஜித் பிரேமதாசவும் உதய கம்மன்பிலவும் சம்பிக்க ரண வக்கவும் தமிழ் வாக்காளர்களை குறிவைத்து வடக்கு கிழக்கிற்கு வந்து போகிறார்கள். அவர்கள் மறு படியும் ஒரு தேர்தல் நாடகத்தை ஆடப் போகிறார்கள் என்று தெரிகிறது. சஜித்தின் வடக்கு விஜயத்தின் போது தமிழ் மக்களை கவர்வதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள் ஏற்கனவே கடந்த பொதுத் தேர்தலின் போது அங்கஜன் பயன்படுத்திய உத்திகள் தான். வடமராட்சியில் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு ஒலிபெருக்கியில் ஊர் ஊராக அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பின் போது பொங்கல் பொதி ஒன்று தரப்படும் என்று உறுதி கூறப்பட்டிருக்கிறது.

அதேபோல சில கிராமங்களில் வீடுகள் தோறும் ஆண்களுக்கான சேர்ட்கள் வழங்கப்பட்டுள்ளன. பொங்கல் பொதி யோடு வந்த சஜித் பிரேமதாச இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பொதியோடு வரவில்லை. பொங்கல் பொதியைக் காட்டி தமிழ் மக்களைக் கவரலாம் என்று அவர் நம்புகிறாரா? இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவரிடம் விசுவாசமான, துணிச்சலான திட்டங் கள் உண்டு என்பதனை அவர் இன்று வரையிலும் நிரூபித்திருக்கவில்லை.

அவரைப் போன்று யாரோ ஒருவரை முன்னிறுத்தி தமிழ். சிங்கள. முஸ்லிம், மலையக வாக்குகளை திரட்டுவதன் மூலம் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்தி விடலாம் என்று சில மேற்கு நாடுகளும் நம்பக்கூடும். ஆனால் தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது ஆட்சி மாற்றம் அல்ல. இலங்கைத் தீவின் நான்கு தேசிய இனங்களின் இருப்பையும் ஏற்றுக் கொண்டு ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை வாக்கு றுதி அளிக்கத் தேவையான துணிச் சலை கொண்ட ஒரு சிங்களத் தலை வர் தான் ராஜபக்ஷக்களுக்கு எதிராக இப்பொழுது தேவை. மூன்று ஆண்டு களில் தோல்வியுற்ற 2015இன் ஆட்சி மாற்றம் அதைத் தான் தமிழ் மக்களு க்கு கற்றுக் கொடுத்திருக்கிறது.

# இரு வேறு வெளியுறவு அணுகு முறைகள்?

தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி தயாரித்த ஆவணம் இனிமேல்தான் இந்திய தூதரகத்திடம் கையளிக்கப்படும் என்று தெரிகிறது. அது கையளிக்கப்படுவது என்பது ஒரு சம்பிரதாயபூர்வ நிகழ்வு. இங்கு அதைவிட முக்கியமானது என்னவெனில் பெரும்பாலான தமிழ் கட்சிகள் ஒன்றுகூடி இந்தியாவை தமிழ் மக்களுக்கு ஆதரவாக தலையிட வேண்டும் என்று கேட்டிருப்பது தான்.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியே நிற்கிறது. அக்கட்சியானது




கூட்டுக் கோரிக்கை முன் வைக்கப்பட வேண்டும் என்பதனை எதிர்க்கிறதா? அல்லது அக் கோரிக்கையாக 13 ஆவது திருத்தம் முன் வைக்கப்படுவதை எதிர்க்கிறதா? என்பதனை உத்தியோகபூர்வமாக தெளிவுபடுத்த வேண்டும். அதாவது இந்தியாவுடன் என்கேஜ் பண்ண வேண்டும் என்ற வெளியுறவு நிலைப்பாடு அக்கட்சியுடன் உண்டா?

இவ்வாறாக கடந்த சுமார் இரு மாத கால தமிழ் அரசியலை தொகுத்துப் பார்த்தால் இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைக்கும் விடயத்தில் தமிழ்ப் பரப்பில் உள்ள கட்சிகள் மத்தியில் இரண்டு துலக்கமான வெளியுறவு நிலைப்பாடுகள் வெளித் தெரிய காணலாம்.

ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இயங்கும் எல்லா கட்சிகளும் ஒருமித்த வெளியுறவு தரிசனத்தை கொண்டிருக்க வேண்டும் என்றில்லை. ஒரு ஜனநாயக பரப்பில் பல்வகைமை இருக்கும். உதாரணமாக தென்னிலங்கை அரசியலில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வரும் பொழுது அமெரிக்க சார்பு வெளியுறவு நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரும் பொழுது அதிகம் தேசிய தன்மைமிக்க ஒரு வெளியுறவுக் கொள்கையை கொண்டிருக்கும். எனவே ஆட்சிக்கு வரும் கட்சிகள் மாறும் பொழுது வெளியுறவு அணுகு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ் அரசியல் பரப்பில் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைக்கும் விடயத்தில் துலக்கமான இரண்டு போக்குகள் மேலெழுந்திருக்கின்றன.

இதில் இந்தியாவை நோக்கி கூட்டு கோரிக்கையை முன் வைக்கும் கட்சிகள் பிராந்திய பேரரசான இந்தியாவை இனப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைப்பதை இறுதி இலக்கை கொண்டிருப்பதாகக் கூறுகின்றன. இந்த இடத்தில் ஒரு அடிப்படை ராஜீய நடைமுறையை சுட்டிக் காட்ட வேண்டும். இந்தியா இனப்பிரச்சினையில் இனிமேல்தான் தலையிட வேண்டும் என்றில்லை. ஏற்கனவே தலையிட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவின் அடிப்படையில் தலையீடு இருக்கிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு சாதகமாக இந்தியா தலையிட வேண்டும் என்பதே மேற்படி கட்சிகளின் உள்நோக்கமாக காணப்படுகிறது.

இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவும் சரி சீனாவும் சரி இலங்கைத்தீவை கையாள்வது என்று வரும்பொழுது கொழும்பிலிருக்கும் அரசைத் தான் கையாண்டு வருகின்றன. கொழும்பை கையாள முடியாத போது அமெரிக்காவும் இந்தியாவும் தமிழ் மக்களை ஒரு கருவியாகக் கையாண்டு கொழும்பை பணிய வைக்கின்றன. இவ்வாறு கொழும்பை கையாளும் ஒரு அணுகு முறையில் மாற்றம் ஏற்படும் பொழுது தான் இந்தியா தமிழ் மக்களின் பக்கம் நின்று இனப்பிரச்சினையில் தலையிடும். இதை இன்னும் கூர்மையாக சொன்னால் கொழும்புடனான உறவுகளை நெருக்கடிக்குள்ளாக்கும் விதத்தில் தமிழ் மக்களை நெருங்கிவர இந்தியா தயாரா? அவ்வாறு இந்தியாவை தமிழ் மக்களுக்கு ஆதரவாக தலையிட வைப்பதற்கு 13ஆவது திருத்தம் ஒரு பொருத்தமான கொழுக்கியா?

தமிழரசுக் கட்சி இம்முயற்சியில் உள்ளே நுழைந்ததும் கோரிக்கையின் வடிவம் மாற்றப்பட்டுள்ளது. எனினும் இந்தியாவின் நலன்களுக்கும் ஈழத் தமிழர்களின் நலன்களுக்கும் இடையிலான பொதுப் புள்ளிகளைக் கண்டு பிடித்து அவற்றை வைத்து பேரம் பேசத்தக்க தலைமைகள் தங்கள் மத்தியில் உண்டு என்பதை மேற்படி கட்சிகள் இனி மேல் தான் நிரூபிக்க வேண்டியிருக்கிறது.

அடுத்ததாக தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நிலைப்பாட்டை பார்க்கலாம். கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் அரசியலில் பூகோள அரசியலைப் பற்றியும் புவிசார் அரசியல் பற்றியும் அதிகமாகப் பேசிய கட்சி தமிழ் தேசிய மக்கள் முன்னணி தான். இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அவ்வாறு பூகோள புவிசார் அரசியலை வெற்றிகரமாக கையாள்வதன் மூலமே கிடைக்கும் என்று கூறிவந்த கட்சியும் அதுதான். எனவே ஒப்பீட்டளவில் ஏனைய தமிழ் கட்சிகளை விடவும் துலக்கமான புத்திஜீவித்தனமான ஒரு வெளியுறவுத் தரிசனத்தை கொண்டிருப்பதாக தோற்றமளித்த அக்கட்சியானது அதன் புவிசார் அரசியல் அணுகுமுறை மற்றும் பூகோள அரசியல் அணுகு முறை தொடர்பான வழி வரைபடத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தியாவை நோக்கி ஒரு கூட்டு கோரிக்கையை முன் முன் வைப்பதை அக்கட்சி எதிர்க்கின்றதா? அல்லது அக் கோரிக்கையாக 13வது திருத்தம் முன் வைக்கப்படுவதை அக்கட்சி எதிர்க்கிறதா? 13தான் பிரச்சினை என்றால் இந்தியாவை நோக்கி என்கேஜ் பண்ணுவதற்கான அக்கட்சியின் வழி வரைபடம் என்ன?

ஏனைய கட்சிகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் தொடர்பாக அக்கட்சி பகிரங்கமாக தெரிவித்து வரும் கருத்துக்களை தொகுத்து பார்த்தால் இந்தியாவுடன் என்கேஜ் பண்ண வேண்டும் என்ற ஒரு வெளியுறவு நிலைப்பாடு அக்கட்சியிடம் உண்டா என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில் மேற்படி கூட்டு கோரிக்கையை ஒன்றுகூடி தயாரித்த கட்சிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்று அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வர்ணிக்கிறார்கள். தமது அரசியல் எதிரிகளை இந்தியாவின் ஆட்கள் என்று சொன்னால் அதன் பொருள் இந்தியாவும் எதிரி என்பது தான். எனவே இந்தியாவோடு என்கேஜ் பண்ண வேண்டும் என்ற வெளியுறவு நிலைப்பாடு அக்கட்சியிடம் இருக்கிறதா என்ற கேள்வி மேலும் பலமடைகிறது. தவிர அக்கட்சியின் ஆதரவாளர்கள் என்று கருதப்படும் லண்டனில் வசிக்கும் தமிழர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்து பார்த்தாலும் அக்கட்சி இந்தியாவை கையாள வேண்டும் என்ற வெளியுறவு நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக தெரியவில்லை.

ஆயின் வேறு எந்தத் தரப்புக்களோடு என்கேஜ் பண்ண வேண்டும் என்று அக்கட்சி நம்புகிறது? அது தொடர்பான வெளியுறவு வழி வரைபடத்தை அக்கட்சி முன் வைக்குமா? இந்தியாவை தவிர்த்து விட்டு பூகோள அரசியலையும் புவிசார் அரசியலையும் எப்படி கையாளப் போகிறது என்பதனை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். கடந்த 12 ஆண்டுகளில் அந்த வெளியுறவுத் தரிசனத்தை நோக்கி அக்கட்சி என்னென்ன நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது என்பதனையும் வெளிப்படுத்த வேண்டும். பிராந்தியத்துக்கு வெளியில் உள்ள பேரரசுகளை கையாள்வதன்மூலம் கடந்த 12ஆண்டுகளில் அக்கட்சி தமிழ் அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்களையும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இப்பொழுது தொகுத்து பார்க்கலாம். இந்தியாவுக்கு கூட்டுக் கோரிக்கை ஒன்றை அனுப்பும் விடயத்தில் தமிழ் கட்சிகள் இரண்டு போக்குகளை வெளிக் காட்டியுள்ளன. ஒரு ஜனநாயக பரப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட போக்குகள் இருக்கும். வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ள காரணத்தால் தான் கட்சிகள் ஒன்றுபடாமல் பிரிந்து நிற்கின்றன. எனவே வெளியுறவுக் கொள்கை பொறுத்து வெவ்வேறு நிலைப்பாடுகள் இருப்பது யதார்த்தம்.

ஆனால் அவை நிலைப்பாடுகளாக மட்டும் இருக்க முடியாது. ஓர் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதுவும் நீதிக்காகப் போராடும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வை பெறுவதற்காக கிடைக்கக்கூடிய எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் தமிழ் மக்களைப் பொருத்தவரை வெளியுறவு நிலைப்பாடு என்பது இலட்சிய வாசகங்கள் அல்ல. அல்லது குழந்தைப் பிள்ளைகளுக்கு நிலவை கண்ணாடியில் காட்டும் விவகாரமும் அல்ல. மாறாக அது தேசத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் இன்றியமையாத ஒரு பகுதி. எனவே அது கற்பனையல்ல. விருப்பங்களும் அல்ல. மாறாக நடைமுறைப்படுத்த வேண்டிய இலட்சியங்கள். எனவே இந்தியாவை நோக்கி கோரிக்கைகளை முன் வைக்கும் கட்சிகளும் சரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் சரி தமது வெளியுறவு நிலைப்பாடுகளை நோக்கி உழைக்கத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். செய்வார்களா?

**நிலாந்தன்**

# சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு தமிழ் வீராங்கனை சாதனை!



பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் இலங்கை சார்பாக பங்கு கொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்து குத்துச்சண்டையில் சாதித்து பாகிஸ்தானில் இடம் பெறும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்கு கொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

18 ஜன 2022 செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் லாகூரில் இடம் பெற்ற 25வயதுக்குட்பட்ட 50-55 கிலோகிராம் எடைப்பிரிவின் இடம் பெற்ற குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் இடம்பெற்றும் சர்வதேச போட்டியில் பங்கு கொள்ள தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# நழுவுகிறது சீனா?

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்





சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியுடனான சந்திப்பின் போது முக்கியமான ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இலங்கை கொரோனா தொற்றுக்கு முகங் கொடுத்துள்ள சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடனை மீளச்செலுத்துவதை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தினால் நாட்டுக்கு பெரும் நிவாரணமாக அமையும் என்பதே அந்தக் கோரிக்கை.

இது விநயமாக விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோள். சீனாவிடம் பெறப்பட்ட கடனை மீளச் செலுத்துவதற்கான கால எல்லையை நீடிப்புச் செய்து தர வேண்டும் என்ற அந்தக் கோரிக்கைக்கு சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யி உடனடியாக எந்தப் பதிலையும் கொடுக்கவில்லை. சீன வெளிவிவகார அமைச்சர் நாட்டை விட்டுச் சென்ற பின்னர் கொழும்பில் குறிப்பிட்ட சில செய்தியாளர்களைச் சந்தித்த சீனத் தூதுவரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அந்த வேண்டுகோளுக்கு சார்பாக சீனா பதிலளிக்குமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு சீனத் தூதுவர் கீ சென் ஹொங்கும் சரி யாகப் பதிலளிக்காமல் நழுவினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பீஜிங்கில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின்னிடம் ஏ.வ்.பி. செய்தியாளர் இலங்கைக்கு கடன் மீளளிப்புக்கான கால அவகாசம் நீடிக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு அவர் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு சீனா தன்னால் இயன்றளவு உதவிகளை வழங்கி வருகின்றது. எதிர் காலத்திலும் அவ்வாறே செய்யும். இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் நாடு நிச்சயமாக தற்காலிக சிரமங்களை விரைவில் கடந்து புதுப்பிக்கப்பட்ட மற்றும் பெரிய வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்று கூறி தப்பிக் கொண்டார்.

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால எல்லையை நீடிப்பது குறித்து சீனா தெளிவான பதிலைக் கூறாமல் தவிர்த்து வருகிறது. இந்த விடயத்தில் சீனா எந்த உறுதி மொழிகளையும் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. கூடிய விரைவில் சீனாவுக்கு வருமாறும் அங்கு அது பற்றிப் பேசலாம் என்று சீன வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் கூறியிருப்பதாகவும் தெரிகிறது.

அவ்வாறாயின் இந்த விடயத்தில் சீனா உடனடியான உத்தரவாதங்களைக் கொடுக்காமல் உத்தரவாதங்களை இலங்கையிடம் இருந்து பெறுவதற்கு முனைகிறது என்றே பொருள். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் 65 ஆண் டுகால நெருங்கிய உறவுகள் உள்ளன. அதற்கும் முன்னரே இறப்பர் அரிசி உடன்பாட்டின் மூலம் இரண்டு நாடுகளும் நல்லுறவைக் கொண்டுள்ளன.

அதனால் தான் துறைமுக நகரில் படகோட்டப் போட்டி தொடக்க விழாவில் சீன வெளிவிவகார அமைச்சரின் முன்பாக உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சீனா எமது உயிர் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம்மத்தியில் மனக்கசப்புகள் நேர்ந்ததில்லை என்று கூறியிருந்தார். (அந்தக் கூற்று எந்தளவுக்கு உண்மையானதென்ற கேள்வி உள்ளது.)

ஏனென்றால் 2015இல் நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இரண்டு விடயங்களில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. ஒன்று கொழும்பு துறைமுக நகர கட்டுமானத் திட்டத்தை ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன இடை நிறுத்தியமை. சுமார் ஆறு மாதங்கள் அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதையடுத்து தமக்கு பெருந்தொகை நட்ட ஈட்டைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று இலங்கை அரசாங்கத்தை சீனா மிரட்டியது வரலாறு.

அடுத்து இலங்கைக்கு சீனா கூடுதல் வட்டிக்குக் கடன் வழங்கியிருப்பதாகவும் கடன்பொறியில் சிக்க வைத்திருப்பதாகவும் நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க குற்றம் சாட்டியிருந்தார். அவர் கடனுக்கான வட்டியை திருப்பிச் செலுத்துமாறு சீனாவிடம் கோரியிருந்தார்.

இப்போது கோட்டாபய ராஜபக்ஷவை எவ்வாறு சீனாவுக்கு வாருங்கள் பேசலாம் என்று அழைப்பு விடுக்கப்பட்டது போலவே அப்போதும் ரவி கருணாநாயக்கவை சீனாவுக்கு வாருங்கள் பேசுவோம் என்று கூறியது பீஜிங்.

அவர் அங்கு சென்ற போதும் கடைசி வரை வட்டியைக் குறைக்க சீனா இணங்கவில்லை. ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு அமையவே கடன் வழங்கப்பட்டதாகவும் கடன் பொறியில் சிக்க வைத்தது தாம் அல்ல, ஏனைய நாடுகளும் நிறுவனங்களும் தான் என்றும் சீனா அவரிடம் கூறி அனுப்பி விட்டது.

அது போலவே சேதன உர இறக்குமதி விவகாரத்திலும் சீனா நடந்து கொண்ட முறையானது உயிர்த் தோழன் ஒருவனின் செயற்பாட்டுக்கு இணையானதல்ல. உயிர்த்தோழன் ஒரு போதும் தீங்கிழைக்கவோ தீங்கான பொருள் ஒன்றையோ நண்பனின் தலையின் மீது கட்டி விடவோ நினைக்க மாட்டான்.

அவ்வாறு தற்செயலாக நிகழ்ந்திருந்தாலும் அந்த உரத்தை மீளப் பெற்றுக் கொண்டு மாற்று நடவடிக்கைகளை எடுத்திருப்பான். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்ற உயிர்த் தோழன் சீனா செய்தது என்ன?

கடன் கொடுப்பனவு உத்தரவாதத்தை மீறியதாக மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்தது. 8 மில்லியன் டொலர்கள் இழப்பீட்டைச் செலுத்தாவிட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டியது. சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிராக முறைப்பாடு செய்தது. வர்த்தக நடவடிக்கைகளை முடங்குவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டது.

இவ்வாறான நடவடிக்கைகளால் மிரண்டு போய்த் தான் இலங்கை அரசாங்கம் 6.9 மில்லியன் டொலர் களைச் சீன நிறுவனத்துக்கு அவசரமாக செலுத்தியது. சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி கொழும்பு வருவதற்கு 24 மணிநேரம் முன்னதாக அந்தப் பணம் செலுத்தப்பட்டு உர விவகாரம் மூடி மறைக்கப்பட்டது.


அதன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் எந்தப் பிரச்சினைகளும் இல்லை, சுமுகமான உறவு இருப்பதாக காட்டிக் கொள்ளப்பட்டது. இலங்கையுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் விடயத்தில் சீனா இரண்டு விதமான அணுகுமுறை களை கையாளுகிறது.

இலங்கையில் தனது திட்டங்களை நிறைவேற்றும் போதும் முதலீடுகளைச் செய்யும் போது அங்குள்ள நிறுவனங்களின் முதலீடாக காட்டுவதில்லை. அதனை சீனாவின் முதலீடாகவே காட்டுகிறது. அதேவேளை அந்த நிறுவனங்களுக்கு இலங்கையில் பிரச்சினை ஏற்படுகின்ற போதும் அதனை சீன அரசின் பிரச்சினையாகவே பார்க்கிறது. துறைமுக நகரத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்ட போதும் சேதன உர விவகாரத்தில் ஏற்பட்ட பிணக்கின் போதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை சீன அரசு தனது பிரச்சினையாகவே தீர்க்க முனைந்தது. ஆனால் சீன நிறுவனங்களின் கடன்கள் என்று வரும் போது அதனை அந்த நிறுவனத்துடனான பிரச்சினையாக கையைக் காட்டி நழுவுகிறது. வட்டியைக் குறைக்குமாறு கோரிய போதும் அது தான் நடந்தது. உரப் பிரச்சினையிலும் அது தான் நடந்தது. அவ்வாறு பார்க்கும் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவ்வாறானதொரு பதிலே அளிக்கப்படக் கூடும். அதேவேளை மக்கள் வங்கி இலங்கை அரசின் வங்கியாக இருந்த போதும் சீன அரசு அதனை கறுப்புப்பட்டிய லில் சேர்த்த போது இலங்கை அரசாங் கத்தினால் எதையும் செய்ய முடிய வில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. சீனா தனது நாட்டுக்கும் தனது நிறுவனங்களுக்கும் ஒரு நீதியை முன் வைக்கிறது. ஏனைய சந்தர்ப்பங்களில் இன்னொரு நீதியை கடைப் பிடிக்கிறது, அதேவேளை உயிர்தோழன் என்றும் எக்காலத்திலும் சீனாவுடன் கசப்புணர்வு வந்ததில்லை என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தாலும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இலங்கை அரசாங்கம் எதிர் பார்த்த உதவிகளுடன் வந்திறங்கவில்லை என்ற உண்மை வெளிச்சமாகியிருக்கிறது. சீன வெளிவிவகார அமைச்சர் மிகப்பெரிய பொருளாதார உதவிப் பொதியுடன் வருவார் என்று அரசாங் கம் எதிர்பார்த்தது. கொழும்பு துறைமுக நகரத்தில் பாரிய முதலீட்டுத் திட்டங்களை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சீன வெளிவிவகார அமைச்சர் கொண்டு வந்ததெல்லாம் வெறும் 800 மில்லியன் யுவான்களைத் தான் இலங்கைக்கு உதவிகள் எதையும் கொடுப்பதற்கோ அல்லது இலங்கையிடம் இருந்து எதையும் அடைவதற்கோ வரவில்லை என்றால் ஏன் அவர் கொழும்புக்கு வந்தார்.

சரத் பொன்சேகா கூறுவது போல சீன அமைச்சர்கள் வேலையின்றி அலைகிறார்களா? எஞ்சியிருப்பதையும் நாசம் செய்யவே இவர்கள் அழைத்து வரப்படுகிறார்களா?

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (கர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அதிபர் உயர்திரு கந்தையா கனகரட்ணம் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி!

இலங்கைத்தீவின் பெரும்பாலான வியாபாரிகளைத் தன்னகத்தே கொண்டிருந்த புங்குடுதீவில் 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு திருமதி கந்தையா சின்னம்மா தம்பதிகளின் மகனாக 25 — 8 — 1925 இல் பிறந்தவர் உயர்திரு கந்தையா கனகரட்ணம் அவர்கள். இவர் தனது உயர்கல்வியை முடித்தவுடன் தனது பிறந்த ஊரிலுள்ள சித்தி விநாயகர் வித்தியாசாலையில் ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார்.

சைவமும் தமிழும் வளர்ந்து கல்வியிற் சிறந்த வேலணைக் கிராமத்தில் திரு திருமதி கந்தையா தையல்முத்து தம்பதிகளின் மகளான பாக்கியத்தை மணம் முடித்து மூன்று புதல்வர்களைப் பெற்றுச் சிறப்புடனே இல்லறம் நடாத்திப் பெருமை கொண்டிருந்தார். தனது சிறு பராயந்தொட்டே விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்ட இவர் யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் உதைபந்தாட்டப் போட்டிகளைத் தவற விடுவதில்லை என்றால் அதுமிகையல்ல.

தனது பிள்ளைகளையும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் உயர்கல்வி பயிலச் செய்து அவர்களையும் உதைபந்தாட்டத்தில் பயிற்சி பெறச் செய்தார். தனது ஆசிரிய மற்றும் அதிபர் பதவிக் காலத்தில் ஓய்வுபெறும் வரை 15 பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை கரம்பொன் சண்முகநாத வித்தியாசாலை சுருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாசாலை வேலணை சரஸ்வதி வித்தியாசாலை வேலணை நடராசா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் குறிப்பிடத்தக்கன.



ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வியுடன் ஒழுக்கத்தையுங் கற்பித்த நல்லாசிரியர் மட்டுமல்ல மனிதநேயம் மிக்க சிறந்த பண்பாளர் என்று அன்னாருடன் பழகிய அனைவராலும் பாராட்டப்பட்டவர்.

தனது வீட்டிற்கு அருகாமையிலிருக்கும் பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத் திருப்பணிகளில் பங்காற்றியதுடன் சமூக சேவைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கந்த சஸ்டித் திருவிழா உபயகாரரும் இவரே. அறுபதுகளின் ஆரம்பத்தில் பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டின் போது விழாக்குழுவில் ஒருவராக இருந்து மகாநாடு சிறப்புற நடைபெறப் பெரும் பணியாற்றினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த மகாநாட்டில் தமிழ் நாட்டிலிருந்து தமிழறிஞர் முனைவர் சாலை இளந்திரையன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியமை பாராட்டுக்குரியது. வேலணைக் கிராமசபைத் தலைவராகவிருந்த உயர்திரு மு. குலசேகரம்பிள்ளை அவர்களின் தளராத முயற்சியில் வேலணையில் துண்டு துண்டாக இருந்த பல வீதிகள் மக்கள் போக்குவரத்துக் கருதி காணி உரிமையாளர்களின் ஆதரவுடன் இணைக்கப்பட்டமை வரலாறாகும்.

இப்பணியின் தொடர்ச்சியாக நீண்ட காலமாக இணைக்கப்படாமலிருந்த வங்களாவடியிலிருந்து சிற்பனை முருகன் கோயிலை நோக்கிச் செல்லும் சிற்பனை வீதியை இணைக்கும் பணியில் முக்கிய பங்காற்றியவர் திரு கனகரட்ணம் ஆசிரியர் என்பது எமது இளஞ் சந்ததியினர் அறியும் வகை செய்தல் சாலச்சிறந்தது. அன்னாது மனைவியின் சகோதரர் திரு செல்லத்துரை அவர்களின் தோட்டக்காணியை ஊடறுத்து இந்தப்பாதை இணைக்கப்பட்டமைக்கு ஆசிரியரின் முயற்சியே முக்கிய காரணமாகும் என்று திரு மு. குலசேகரம்பிள்ளை அவர்களின் அன்பு மகன் திரு கு. வரதராஜன் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் கதைக்கும் போது அடிக்கடி ஞாபகப்படுத்துவார்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக கனடாவுக்கு இடம் பெயர்ந்து பிள்ளைகளுடன் வாழுங் காலத்தில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும் எழுத்தாளருமான திருமதி பார்வதி கந்தசாமி அவர்களது வசந்தம் அமைப்பின் ஆதரவில் ரொறன்ரோ முதியோர் அமைப்பை உருவாக்கியதுடன் அதன் ஆரம்பகாலத் தலைவராகவும் செயற்பட்டுப் பல நல்ல காரியங்களைச் செய்து வந்தார்.

குறிப்பாக முதியோர்களுக்குத் தகுந்த ஆலோசனை வழங்கல் அவர்களின் பொழுதுபோக்கிற்காக சீட்டாட்டம் போன்ற விளையாட்டுகள் மற்றும் நண்பர்கள் கூடிக்கதைத்து மகிழக் கூடிய இடவசதியையும் ஏற்படுத்திக் கொடுத்ததுடன் முதியோர் சங்கம் தொடர்ந்து செயற்படத் தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்கினார். பின்னர் முதுமை காரணமாக தனது மூத்தமகன் திரு பாஸ்கரன் அவர்களுடன் வாழ்ந்து வந்த போது



தனது 94வது வயதில் 4 ஜனவரி 2019 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பெருங்குளம் முத்துமாரி அம்மனை வேண்டுகின்றேன். ஓம் சாந்தி!.

**சி.இளஞ்செழியன்**


A C TOUR

ALL COUNTRIES TOUR SERVICES

## கியூபா சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும், வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்

2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்

7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,000 | REGULAR C$1,250.00 | REGULAR C$1,500.00 | REGULAR C$1,750.00 | REGULAR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, cook, chef and tour guide

25, CROUSE ROAD, UNIT 4078, TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com

facebook.com/Allcountriestour

416 644 7279 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

# சீனாவின் உயிர் நண்பனான இலங்கைக்கு இந்தியாவின் நிதி உதவித் தொகை அறிவிப்பு!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– K.T. கணேசலிங்கம் –





இந்திய இலங்கை உறவு முரண்பாட்டையும் சுமுக தன்மையையும் மாறிமாறி கொண்டிருக்கும் போக்கொன்று கடந்த பல தசாப்தங்களாக நிகழ்ந்த வருகிறது. இதன் தொடர்ச்சி சமகாலத்திலும் பேணப்படுகிறது.

இலங்கையின் நிதியமைச்சர் டிசம்பரில் இந்தியாவிற்கு மேற் கொண்ட விஜயத்தின் போது நான்கு பிரதான கோரிக்கைகளை முன்வைத்தார். அதற்கான பதிலை 13.01.2022 900 மில்லியன் டொலர் நிதியுதவியினை வழங்கியதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. அதே நேரம் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிற்கு கையளிப்பது தொடர்பான உடன்பாடும் தமிழ்த்தேசிய கட்சிகளின் இந்திய பிரதமருக்கு அனுப்ப திட்டமிட்ட ஆவணத்தின் வடிவமும் இக்காலப்பகுதி இலங்கை — இந்திய உறவை முதன்மைப்படுத்துவதாக அமைந்து உள்ளது. இக் கட்டுரை சீனாவின் உயிர் நண்பனான இலங்கைக்கு இந்தியாவின் பாரிய நிதியுதவி என்பதை புரிந்து கொள்வதாக அமையவுள்ளது.

இந்திய மத்திய அரசு 900மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதியுதவியை இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை வலுப்படுத்துவதற்காக வழங்குமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை நேரில் சந்தித்து உறுதிப்படுத்தியதாக செய்திகள் வெளியாகி உள்ளது. இதே நேரம் ஈழத்தமிழர்களின் நீடித்த இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அனுசரனை வழங்கும் நோக்குடன் இந்திய பிரதமருக்கு கைச்சாத்திட்ட ஆவணத்தை இலங்கைக்கான இந்திய தூதுவரிடம் கையளிக்க தயாரான போது தூதுவர் புதுடில்லி சென்றிருப்பதாக செய்தி வெளியாகியிருந்தது.

இவ்விரண்டு செய்திகளும் இலங்கை இந்திய உறவினையும் ஈழத்தமிழர்களின் அரசியல் இருப்பினையும் புலப்படுத்துகின்ற விதத்தில் அவதானிக்க வேண்டியது அவசியமாகும். முதலாவது இந்திய தரப்பு தென்னிலங்கையோடு புரிதலையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவது என்பது அந்த நாட்டின் நலனுக்கு உட்பட்டது.

திருகோணமலை எண்ணெய் குதங்கள், மேற்கு முனையம், பலாலி சர்வதேச விமான நிலையம், காரைக்கால் கப்பல் சேவை போன்ற விடயங்கள் பொறுத்து இந்தியாவின் நகர்வுகள் அவசியமானவையாகும். அத்தகைய நகர்வுகள் இந்திய நலன்களை இலங்கையிலும் இந்து சமுத்திர பிராந்தியத்திலும் தென்னாசியாவிலும் உறுதிப்படுத்தக்கூடியது. ஆனால் அதேநேரத்தில் ஈழத்தமிழர்கள் நீண்ட நெருக்கடிக்குள் காணப்படுவது மட்டுமன்றி 2009களுக்கு பின்னர் தீர்வுமின்றி இருப்புக்கான உத்தரவாதமுமின்றி காணப்படுகிறார்கள் என்பது இந்தியாவின் கரிசனைக்குட்பட்டதே.

இதனை கருத்திற் கொண்டே இந்தியாவை நோக்கி இந்தியாவின் முக்கியத்துவம் கருதியும் தமிழ்த்தேசிய கட்சிகள் நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவும் திட்டமிட்டிருந்தன. அத்தகைய திட்டமிடலை இந்திய தரப்பு உதாசீனம் செய்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட தொடங்கியுள்ளது.

காரணம் அஜித் கப்ராலை சந்தித்து செய்தி சொல்லும் இந்தியத் தூதுவர் கடிதம் கையளிக்க தயாரான போது புதுடில்லி சென்றதாக செய்தி வெளியானது குழப்பத்தை தருகிறதாகவே தெரிகிறது.

இரண்டாவது அதேநேரம் தமிழ்த் தேசிய கட்சிகள் நீண்ட இழுபறிகளுக்கு பின்னர் உடன்பாட்டில் கையெழுத்திட்ட அதே தினத்தில் திருகோணமலை எண்ணெய்க்குதங்கள் தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஓர் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அவ்வாறாயின் தமிழ்த்தேசிய கட்சிகளின் நகர்வுகளை முன்னிறுத்தி எண்ணெய் குதங்கள் சார்ந்த உடன்பாட்டை இந்தியா அடைந்துள்ளதா என்ற கேள்வி நியாயமானதாகவே உள்ளது. அதாவது ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை முன்னிறுத்திக்கொண்டு தென்னிலங்கை ஆட்சியாளர்களை தமது கட்டுப்பாட்டுக்குள்ளும் செல்வாக்குக்குள்ளும் கொண்டு வருவதற்கு இந்திய தரப்பு முனைகிறதா என்ற குழப்பமே அதுவாகும். இந்திய இலங்கை உடன்பாடு மட்டுமல்ல கச்சதீவு உடன்படிக்கை, சிறிமா சாஸ்தரி உடன்பாடு என்பன எல்லாமே இந்திய நலன்களுக்குட்பட்டதேயாகும்.

மூன்றாவது ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசை இந்தியாவுடனான புரிதலை ஏற்படுத்தமாயின் தென்னிலங்கையின் ஆட்சி அதீத குழப்பத்தை எதிர்கொள்ளும். இதனை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக்காலம் முதல் அவதானிக்க முடிகிறது. அவர் முன்னின்று செயற்பட்டு ஈழத்தமிழர்களையும் இந்தியாவையும் திட்டமிட்டு பகையாளிகளாக மாற்றினார். அத்தகைய பகைமையே பின்வந்த தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பேணி பாதுகாத்து பலப்படுத்தி வருகின்றனர்.

அதாவது ஈழத்தமிழருக்கும் இந்தியாவுக்குமான புரிதல் சாத்தியப்பாடுடைய சூழல் அமைகின்ற போதெல்லாம் இந்தியர்களின் கோரிக்கைகள் எத்தகையதாயினும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அதனை நிறைவேற்றியே வந்துள்ளனர். அதன் ஒரு வடிவமாகவே எண்ணெய் குதங்கள் தொடர்பிலான உடன்பாடு புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

நான்காவது இந்தியா திருகோணமலை எண்ணெய்க்குதங்கள் தொடர்பிலே எட்டிய உடன்பாடு தொடர்பிலே உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கெதிரான போராட்டங்களும் அமைச்சரவை தீர்மானத்தில் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளது. இதே விடயத்தை இந்திய தரப்பு கிழக்கு முனையத்திலும் அனுபவித்திருந்தது என்பதை சுட்டிக் காட்டுதல் அவசியமாகும். கிழக்கு முனையம் இந்தியாவிற்கு வழங்கப்படாமைக்காக அரசாங்கம் இந்தியாவிற்கு தெரிவித்த பிரதான விடயம் தொழிற்சங்க எதிர்ப்பாகும்.

அதே நேரம் கிழக்கு முனையம் சீனாவிற்கு கையளிக்கப்பட்டமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயமாகும். எனவே இதே அனுபவத்தை திருகோணமலை எண்ணெய் குதங்களில் தொடர்பிலான உடன்பாட்டிலும் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை உயர்நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்ட தனிநபர் வழக்கிலும் மக்களது ஆர்ப்பாட்டத்திலும் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மக்களின் எதிர்ப்பினால் அரசாங்கம் இந்தியாவுடனான உடன்பாடுகளை நிராகரித்த செயற்பட வேண்டிய சூழல் ஏற்படுவதாக வெளிப்படுத்துகிறது. அதே நேரம் சீனாவின் நுரைச்சோலை மின்நிலைய திட்டத்திலும் ஹம்பாந்தோட்டை துறைமுக 99 வருடக் குத்தகைக்கு கையளிப்பிலும் மக்கள் போராட்டங்கள் அன்றைய அரசாங்கங்களால் முறியடிக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்க வேண்டிய விடயமாகும்.





ஐந்தாவது இத்தகைய பாரிய நிதியினை வழங்க இந்தியா முன்வந்த போது நிச்சயமாக இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்பதில் அதிக குழப்பம் இல்லாத போதும் இலங்கைப் பிரதம மந்திரியினது அண்மைய சீனா தொடர்பான அறிவிப்பென்பது கவனத்திற்குரியதாகும்.

அதாவது இலங்கையின் உயிர் நண்பன் சீனா என்பதாகும். அதுவே நிரந்தரமானது. அத்தகைய தென் இலங்கை ஆட்சியாளரின் உபாயம் சரியானதே. இந்தியாவை கையாள சீனா அவசியமானது. சீனாவை முன்னிறுத்தி 900 மில்லியன் நிதியுதவியை இந்தியாவிடம் பெற்று விட்டது தென் இலங்கை அரசாங்கம். இந்தியாவால் அத்தகைய நிதியளிப்பட்ட போது சீனாவின் கடன்களை கையளிக்குமாறும் கோரப்பட்டதாகவும் செய்தியொன்றுள்ளது.

அதனை பக்கச்சார்பின்றி உறுதிப்படுத்த முடியாதுள்ளது. எதுவாயினும் சீனாவின் உயிர் நண்பனுக்கு இந்தியா நிதியுதவியளித்துள்ளதாகவே விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இவ் நிதியுதவிக்காக தென் இலங்கை சீனாவின் நட்பினை கைவிடும் என்று இந்தியா கருதுமாயின் உலக வரலாற்றில் இதனை விட மோசமான இராஜதந்திர நகர்வாக வேறு எதுவும் அமையாது.

ஆறாவது தற்போது தென் இலங்கையால் பெறப்பட்ட நிதியுதவியானது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கானது மட்டுமல்ல. அது தென் இலங்கையின் அரசியல் நெருக்கடிக்குமானது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது அரசியல் பொருளாதார நெருக்கடியேயாகும். இலங்கை ஏற்றுமதியினாலோ உற்பத்தியினாலோ இயங்கும் நாடு அல்ல. மாறாக கடன், நன்கொடை மற்றும் நிதியுதவியினாலும் முதலீட்டுதர் திட்டங்களாலும் இயங்கும் ஒரு நாடு. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எனக்குறிப்பிடும் விடயம் மேற்கு நாடுகளாலும் அவற்றின் நிதி நிறுவனங்களாலும் ஏற்பட்ட நெருக்கடியாகும். சீனாவுடனான தென் இலங்கை ஆட்சியாளரின் நெருக்கமான அரசியல் இராணுவ உறவும் சீனாவின் இலங்கைக்கான நிதியுதவிகளுமே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இலங்கைக்கு நிதி உதவி மறுக்கப்பட்டமைக்கான காரணமாகும். எனவே இது ஒரு தற்காலிகமான நெருக்கடியே அன்றி ஒரு பொருளாதார மந்தம் அல்ல. இலங்கையில் எந்தவொரு நிதி நிறுவனமோ வங்கியோ கம்பனியோ இதுவரை மூடப்படவில்லை. அவ்வகை நிறுவனங்கள் எதுவும் திவாலாகவில்லை.

எனவே இந்தியாவின் தற்போதைய நகர்வுகள் எந்தவிதத்திலும் ஈழத்தமிழருக்கானதல்ல. அது இந்திய நலனுக்கானது. ஆனால் அத்தகைய நலனும் இந்தியாவால் எட்டப்படுமா என்பதே பிரதான கேள்வியாகும். சீனாவின் நண்பனை இந்தியா பாதுகாத்துக் கொண்டு இந்தியாவின் நலனை அடைய முடியுமொன கருதுவது அபாயமானதே. ஆனால் இந்தியாவின் நகர்வுகளை ஈழத் தமிழருக்கானதாக மாற்றுவதென்பது ஈழத்தமிழரது அரசியலிலேயே தங்கியுள்ளது. அது சாத்தியப்படாத வரை ஈழத்தமிழர் இருப்பில் எந்த மாற்றமும் நிகழவாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

நன்றி — அருவி

# அரசின் உள் முரண்பாடுகள் தேசிய அரசுக்கு வழி வகுக்குமா?

**கொழும்பில் இருந்து**
**ஐ.வி.மகாசேனன்**

இலங்கை அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடுகள் அரசாங்கத்தின் ஸ்திர தன்மை தொடர்பிலும் கொள்கைகள் தொடர்பிலும் மக்களுக்கு நம்பிக்கையீனத்தை உருவாக்கி வருகிறது. நாளடைவில் அதிகரித்துக் கொண்டே செல்லும் அரசாங்கத்தின் உள்ளக முரண்பாட்டின் உச்சக் கட்டமாகவே கல்வி இராஜாங்க அமைச்சராக காணப்பட்ட சுசில் பிரேமஜயந்தவின் இராஜாங்க அமைச்சுப் பதவி நீக்கப்பட்டுள்ளது.

இதனை ஆளுங்கட்சிக்குள் உள்ள ஏனைய சிறுகட்சிகள் கடுமையாக எதிர்த்துள்ளன. எனினும் பொதுஜனபெரமுன அரசாங்கத்தின் தலைமைகள் தமது முடிவில் உறுதியாக உள்ளனர். இதனை மையப்படுத்தி ஆளுங்கட்சியில் காணப்படும் சிறு கட்சிகள் வெளியேறி புதிய கூட்டுக்குள் பரிணமிக்க வாய்ப்புள்ளதா என்ற தேடல் இலங்கை அரசியல் ஆய்வு பரப்பில் முதன்மையான விடயமாக காணப்படுகிறது.

ஜனவரி03 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பங்கு குறித்து ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்ட நிலையில் ஜனவரி 04 அன்று சுசில் பிரேமஜயந்த உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது.

சுசில் பிரேமஜயந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் பிரமுகராக காணப்படுகின்ற போதிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் கொண்டிருந்த நெருக்கத்தின் காரணமாக பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டார். எனினும் சமீப காலமாக அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வந்தார். மேலும் அவர் ஒரு சமிஞ்ஞை பதவியாக இருக்க விரும்பவில்லை என்றும் வேறு இடங்களில் எடுக்கப்படும் முடிவுகளுக்காக கைகளை உயர்த்த விரும்பவில்லை என்றும் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

மேலும் நாடு எதிர்கொண்ட உரப் பிரச்சனை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பொலவில் சந்தையில் அவர் அளித்த பதிலே அவரது பதவி நீக்கப்படுவதற்கான காரணமாகவும் அனுமானிக்கப்படுகிறது. சுசில் பிரேமஜயந்த தனது பதிலில் விவசாய அமைச்சர் தோல்வியடைந்துவிட்டதாகவும் விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தான் காரணம் எனவும் தெரிவித்தார்.

சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கமானது அரசாங்கத்தினுள் இருந்து கொண்டு அரசாங்க செயற்பாடுகளை விமர்சிக்கும் ஏனையவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அவதானிக்கப்படுகிறது. இந்நிலையில் பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்குள் காணப்படும் பிற கட்சிகள் சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

இது பொதுஜன பெரமுனவினுள் காணப்படும் சிறுகட்சிகள் புது கூட்டு உருவாக்கத்துக்கான நேரமாக அமையுமா என்பது தொர்பிலும் இலங்கை அரசியல் பரப்பில் உரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒன்று பொதுஜன பெரமுன அரசாங்கம் 2 — 3 பெரும்பான்மை பலத்துக்கு கிட்டிய ஆதரவுடன் 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கம் உருவாக்கப்பட்ட தினத்திலிருந்தே அரசாங்கத்தினுள் காணப்படும் பிறகட்சிகளை உதாசீனம் செய்வதாக முரண்பாடு தொடர்ச்சியாக நிலைபெற்றே வருகிறது. எனினும் அரசாங்கத்தின் அதிமுக்கிய சட்ட மூலங்கள் மற்றும் வரவுசெலவுத் திட்ட வாக்கெடுப்புக்களிற்கு அரசாங்கத்தினுள் உள்ள அனைத்து கட்சிகளும் தொடர்ச்சியான ஆதரவை அளித்தே வருகின்றன.

குறிப்பாக 20ஆம் திருத்த சட்டத்தில் இரட்டை குடியிருப்பு உடையவர்களின் அரசியல் பிரவேசத்தை அனுமதிக்கும் ஏற்பாடு நிதியமைச்சராக பசில் ராஜபக்ஷவை நியமித்தல் மற்றும் அமெரிக்காவுடனான யுகதனி மின்நிலைய ஒப்பந்தம் என்பவை தொடர்பிலே பொதுஜன பெரமுன அரசாங்கத்தினுள் காணப்படும் பிற கட்சிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய போதிலும் பொதுஜன பெரமுன அவற்றை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்த போது எதிர்ப்பை வெளிப்படுத்திய கட்சிகளும் தமது ஆதரவை வழங்கி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



இரண்டு சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கத்தின் பின்னர் புதிய கூட்டணி உருவாக்கம் தொடர்பில் அதிகம் உரையாடும் அரசாங்க கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி காணப்படுகிறது. ஜனவரி 11 அன்று மத்திய கொழும்பில் நடை. பெற்ற கட்சி நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றுகையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமாகிய மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் எதிர்காலத்தில் ஆட்சி மலரும் எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் தேசிய அரசாங்க உருவாக்கம் தொடர்பிலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களிடமிருந்து பொதுவெளியில் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. எனினும் அக்கருத்துக்கள் நம்பிக்கையீனமுடையதாகவே காணப்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது தொடர்பிலான செய்திகள் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் பொதுஜன பெரமுன தலைமையில் அரசாங்கம் உருவாக்கப்பட்டதிலிருந்தே உரையாடப்பட்டு வருகின்றன. குறிப்பாக அமைச்சர்கள் நியமனத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரான மைத்திரிபாலசிறிசேனா புறக்கணிக்கப்பட்டிருந்தார்.

கூட்டணியில் காணப்படுமோர் கட்சி என்பதற்கு அப்பால் இலங்கையின் வரலாற்றில் தனித்துவமான கட்சியாக திகழும் கட்சியின் தலைமைக்கு அரசாங்க உருவாக்கத்தின் போது அமைச்சர் பதவியேதும் வழங்காத போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ச்சியாக பொதுஜன பெரமுனவுடன் இணைந்திருப்பது அதன் பலவீனத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே தற்போது உரையாடப்படும் புதிய கூட்டணி உருவாக்கங்களும் நம்பிக்கையீனமுடையவையாகவே காணப்படுகின்றன.

மூன்றாவது தேசிய அரசாங்கம் பற்றிய உரையாடலை முன்வைக்கும் மற்றொரு தரப்பாக ஐக்கிய தேசிய கட்சி காணப்படுகின்றது. ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தன நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தால் அந்த அரசாங்கத்தின் பிரதமர் பதவியை ஏற்க ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். கடந்த 2015 — 2018ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருந்த தேசிய அரசாங்கம் தோல்வியடைந்தமையில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியினை கட்டுப்படுத்த முற்பட்டமை என்ற குற்றச்சாட்டுகளும் காணப்படுகின்றன. அத்துடன் தற்போதைய பாராளுமன்றத்தில் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு தேசிய அரசாங்கத்தின் பிரதமர் பற்றிய உரையாடலை முன்வைப்பது கருத்தியலுக்கு அப்பால் அரசியல் பிரசார உரையாடலாக மாத்திரமே காணப்படுகிறது.

நான்காவது பொருளாதார நெருக்கடியால் பொதுஜன பெரமுன வீழ்ச்சியுற்றுவிட்டது என்பது நிராகரிக்க இயலாத வாதமாக அமைகின்ற போதிலும் அக்காரணமொன்று மாத்திரம் அரசாங்கத்தை அகற்ற போதுமானதாக கருத இயலாது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், சமையல் எரிவாயு பற்றாக்குறை, மின்சாரம் தடை மற்றும் டாலர் நெருக்கடிக்கு மத்தியில் பல பிரச்சினைகள் அரசாங்கத்தின் புகழ் வீழ்ச்சியடைந்துள்ளன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனினும் பொதுஜன பெரமுனவின் உருவாக்கம் யுத்தவெற்றி வாதத்தை மையப்படுத்தியது. அதற்கு நிகரானவொரு பெருந் தேசியவாத உருவாக்கம் சாத்தியமாகாத வரையில் பொதுஜன பெரமுனவிற்கான வாய்ப்புக்கள் காணப்படவே செய்கின்றன. பொதுஜன பெரமுன அரசாங்கத்தினுள் உள்ள சிறு கட்சிகளை பொதுஜன பெரமுன தலைமைகள் நிராகரிக்கின்ற போதிலும் சிறு கட்சிகள் எதிர்க் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற போதிலும் புதிய கூட்டணி பற்றிய எண்ணங்களை தவிர்த்து செல்வதற்கான பிரதான காரணமாக அமைவது பொதுஜன பெரமுனவிற்கு பின்னாலுள்ள பெருந்தேசியவாத ஆதாரவேயாகும்.

ஐந்தாவது இலங்கயைில் தற்போதைய பொருளாதார மற்றும் உணவு நெருக்கடி பிரச்சகனைகளை பொதுவெளியில் பூதாகரமான உரையாடலாக்கி தலைமை தாங்கும் ஆளுமை அற்றவர்களாகவே எதிர்க்கட்சிகள் உள்ளன. ஆட்சியமைத்து இரண்டு வருட காலப்பகுதியில் மக்கள் மத்தியில் பொதுஜன பெரமுன அரசாங்கம் அதிகளவில் விமர்சனங்களை எதிர் கொண்டு வருகிறது. சமூக ஊடகங்களில் கோபமான எதிர்ப்புக்கள் இலங்கையின் நிறைவேற்றுத்துறை ஜனாதிபதிக்கு எதிராகவே அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக வீதியிலிறங்கி போராடுகின்றன. அதிகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் தமிழ்ச் சமூகமும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி எனும் பாரிய மக்கள் எழுச்சி பேரணியை அரசாங்கத்துக்கு எதிராக ஒழுங்கமைத்துள்ளது. எனினும் இலங்கயைின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மக்களிடம் அரசாங்கம் தொடர்பில் எழுந்துள்ள எதிர்ப்புக்களை ஒன்று திரட்டி மக்கள் ஆதரவை திரட்டும் வினைத்திறனற்றவர்களாக காணப்படுகின்றது. பொதுஜன பெரமுன அரசாங்கமானது கடந்த தேசிய அரசாங்கத்தில் நடைபெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கு எதிராக மக்களிடமிருந்த அதிருப்தியை ஒன்று திரட்டி தாம் ஆட்சியமைப்பதனூடாக அதனை சீர் செய்ய முடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியதன் மூலமே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி கொண்டார்கள். எனினும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நம்பிக்கையீனமாக உள்ளவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் தரப்பாக செற்படும் ஆளுமையற்றவர்களாக காணப்படுகிறார்கள்.

ஆறாவது எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பலவீனத்தால் தேசிய மக்கள் சக்தி கூட்டமைப்பு (ஜே.வி.பி — ஜாதிக ஜன பலவேகய) மற்றும் அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியவற்றுடன் மாற்றுவழிகளை நோக்கி ஊடகங்கள் சாய்ந்து கொண்டிருக்கின்றன. ஜே.வி.பி தலைமையிலான கூட்டணி தற்போதைய சவால்களை முறியடிக்க விரைவான பதில் என்ற தலைப்பில் ஒரு வகையான அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது. பொதுமக்களிடம் இலங்கையை மீட்சிக்கான நிலையான பாதையை அமைப்பதற்கான ஒரு மூலோபாயமாக கொள்கை மாற்று வழிகளை ஆவலுடன் எதிர்பார்க்கும் தன்மை அடையாளப்படுத்தப்படுகிறது.

அநுரகுமார திசாநாயக்கவின் பலம் எப்போதுமே ஊழல் மற்றும் அரசாங்கத்தின் அத்துமீறல்கள் பற்றிய தெளிவான துல்லியமான மற்றும் வண்ணமயமான வெளிப்பாடு ஆகும். எனினும் 2004ஆம் ஆண்டு சுதந்திர முன்னணி அரசாங்கம் மற்றும் 2005ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவின் வேட்பு மனுவிற்கு முட்டுக் கொடுத்தமை என்பவை ஜே.வி.பி ஒரு காலத்தில் அரசியல் மாற்றத்திற்குரியவர்களாக காணப்பட்ட வரலாறுகளை நினைவூட்டுகிறது. இதனால் அநுரகுமார திசாநாயக்கவினை தாண்டி மக்கள் மத்தியில் ஜே.வி.பி நம்பிக்கையை கட்டமைப்பது சிரமமாக உள்ளது.

# அதிருப்திக்கு உள்ளாகும் தி.மு.க

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்று எட்டு மாதங்கள் கடந்த பிறகு அவருடைய தலைமையிலான அரசு மீது மக்கள் அதிருப்தி கொள்ள தொடங்கியிருக்கின்றார்கள்.

குறிப்பாக தமிழக மக்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்கும் விடயத்தில் தி.மு.க. அரசு தெளிவான திட்டமிடலுடன் மக்களுக்கு உரிய வகையில் பொருட்களை வழங்கவில்லை என்பது அதிருப்திக்கான முதற்காரணமாக உள்ளது.

அதே தருணத்தில் ஆளும் தி.மு.க. அரசு மத்திய அரசை தீவிரமாக எதிர்க்க இயலாமலும் தீவிரமாக ஆதரிக்க இயலாமலும் தவித்து வருகிறது. குறிப்பாக பா.ஜ.க.வைத் தவிர்த்து தமிழக மக்களின் நலன்களை முன்னிறுத்தும் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றன.

இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றிய தீர்மானம் தமிழக ஆளுநர் மாளிகையில் தூசி படிந்து கிடக்கிறது. தமிழகத்தின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசும் சட்டப் பேரவையும் இயற்றிய தீர்மானத்தை



மத்திய அரசுக்கும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கும் அனுப்ப வேண்டிய கடமையை மட்டும் செய்ய வேண்டிய ஆளுநர் அந்த கடமையை செய்வதற்கு தொடர்ந்து மறுத்து வருகிறார். தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆளுநரை நேரில் சந்தித்து இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் அவர் தொடர்ந்து மௌனம் காப்பதால் அரசியலில் அவரது பங்களிப்பு குறித்தும் தமிழக மக்களின் நலனுக்கு எதிராக செயல்படும் ஆளுநரை இட மாற்றம் செய்ய வேண்டும் என்பது குறித்த கோரிக்கைகளும் மேலெழத் தொடங்கியிருக்கின்றன.

மேலும் இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழக அரசு நீட் தேர்வு விலக்கு குறித்த சட்டப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் பேசிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் நீட் தேர்வு கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைப்பதாக உள்ளது. மேலும் இது மாநில அரசு நடத்தும் 12ஆண்டு பாடசாலைக் கல்வியை அர்த்தமற்றதாக்குகிறது. மாநில அரசால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை உரிமையை மத்திய அரசு பறித்து விட்டது.

நீட் விலக்கு பெறுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை அனைத்து கட்சி களும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டிருக்கிறார். ஆளுநரின் கால தாமத நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்த ஆளுங்கட்சியான தி.மு.க. இதற்கு மாற்றாக மத்திய உள்துறை அமைச்சரை சந்தித்து முறையிடுவதற்கு பல முறை வேண்டுகோள் விடுத்தும் அவர்களை மத்திய உள்துறை அமைச்சர் தொடர்ந்து சந்திக்க மறுப்பு தெரிவித்து வருகிறார். மேலும் இது தொடர்பாக குடியரசுத் தலைவரை சந்திக்கவும் வாய்ப்பு கிடைக்காத நிலையே தொடர்ந்து நீடிக்கிறது. இதன் பின்னணியில் அண்மையில் உச்ச நீதிமன்றம் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27சதவீத இட ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று தீர்ப்பளித்தது. இதனை வரவேற்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, அறிக்கை வெளியிட்டுள்ளார். இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் விவகாரத்தில் வரலாறு தெரியாமல் அண்ணாமலை அறிக்கை விட்டுள்ளார். 2017ஆம் ஆண்டில் மருத்துவ கல்வியில் நீட் தேர்வை நுழைத்தது பா.ஜ.க. தலைமை யிலான மத்திய அரசு. அத்துடன் மாநில அரசின் வசமிருந்த மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் மத்திய அரசு வசம் சென்றது. அகில இந்திய தொகுப்பு விடயங்களில் பிற்படுத்தப்பட் டோருக்கான இட ஒதுக்கீட்டையும் நடைமு றைப்படுத்த மறுத்தது. இதன் மூலமாக சமூக நீதியை சிதைத்தவர்கள் பா.ஜ.க.வினர் தான்.

ஆனால் இதே பா.ஜ.க.வினர் 2019ஆம் ஆண்டில் உயர் ஜாதியில் நலிந்த பிரிவினருக்கு 10சதவீத இட ஒதுக்கீடு வழங்க தீர்மானித்தனர். அவசரம் அவசரமாக 5 நாட்களில் அரசமைப்பு திருத்தச் சட்டத்தை கொண்டு வந்தனர். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் 5நாட்களில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று சட்டமாக்கினார்கள்.

பொருளாதார அளவுகோல்படி ஆண்டுக்கு எட்டு இலட்சம் ரூபா வருவாய் ஈட்டுபவர்கள் ஏழைகள் என்றும் பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் என்றும் வரையறுத்தனர். அதாவது மாதம் 60,ஆயிரம் ரூபா வருமானம் ஈட்டுபவர்கள் உயர் சாதியினர் ஏழை என்பது மத்திய அரசின் நிலைப்பாடு. இதைத்தான் உச்சநீதி மன்றம் சுட்டிக் காட்டி 27சதவீத இடஒதுக்கீடு உறுதி செய்து ஆணையிட்டது.

இதற்காக தி.மு.க. சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அந்த வழக்கில் சென்னை உயர் நீதி மன்றம் 27சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று உத்தர விட்டது. அப்போதைய ஆளும் கட்சியான அ.தி.மு.க. இதனை முறையாக மத்திய அரசுக்கு தெரிவிக்காததால் மத்திய அரசு இட ஒதுக்கீட்டை ஏற்க மறுத்தது. இதன் காரணமாகத் தான் உச்ச நீதிமன்ற தீர்ப்பை பெரியாருக்குக் கிடைத்த காணிக்கையாக கருதுகிறேன் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனிடையே தி.மு.க.வின் அரசியல் வாரிசாக உருவாகி வரும் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவராக விரைவில் பொறுப்பேற்கவிருக்கிறார் என்றும் இதற்கு அச்சாரமாக தற்போது தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவராக இருக்கும் ரூபா குருநாத் பதவி விலகியுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

அத்துடன் பா.ஜ.க.வின் மூத்த தலைவரான அமித்ஷாவின் வாரிசு ஜெய்ஷா, மறைந்த பா.ஜ.க. மூத்த தலைவர் அருண் ஜெட் லியின் வாரிசு ரோஹன் ஜெட்லி ஆகியோருடன் உதயநிதி ஸ்டாலின் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதால் விரைவில் அவர் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவராக பதவியேற்க கூடும் என்று உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதயநிதி ஸ்டாலின் பா.ஜ.க.வின் தலைவர்களின் வாரிசுகளுடன் உறவை தொடர்வதால் விரைவில் தி.மு.க.வுடன் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சிலர் தெரிவிக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக முரசொலி மாறன் மற்றும் கலைஞர் அவர்கள் உயிருடன் இருந்தபோது தி.மு.கவிற்கும், பா.ஜ.க.விற்கும் இடையில் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டதை சுட்டிக் காட்டுகிறார்கள். தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என அக்கட்சியின் தயவால் சட்டமன்ற உறுப்பினரான எச்.ராஜா போன்ற பா.ஜ.க. தலைவர்களும் விரும்புவதால் பா.ஜ.க., தி.மு.க. கூட்டணி உருவாகக்கூடும் என சிலர் கூறுகிறார்கள்.

ஆனால் கொரோனா கட்டுப்பாடு என்ற போர்வையில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஆலயங்களை மூடுவது பொங்கல் தொகுப்பில் ரொக்கப் பணம் இடம்பெறாதது அம்மா உணவகத்தின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருவது கூட்டுறவு நகைக் கடன் தள்ளுபடியில் குளறுபடி சட்டப் பேரவை கூட்டத்தொடரில் விதி எண் 110 கீழ் பெண்களுக்கான உரிமை தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு இடம் பெறாதது போன்ற மக்களின் பல எதிர்பார்ப்புகளை ஆளும் கட்சியான தி.மு.க தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருவதாலும் தெளிவான பதிலை வழங்காததாலும் தி.மு.க. அரசு மீது மக்கள் அதிருப்தி நீடித்துக் கொண்டிருக்கின்றது.

**தமிழகத்தில் இருந்து**

**– குடந்தையான் –**

# விண்வெளியில் ஒலிக்கவுள்ள இசைஞானி இளையராஜாவின் இசை



தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம், மராத்தி என பன்மொழிகளில் இசையமைத்துள்ள இளையராஜாவின் இசை விண்வெளியில் ஒலிக்கவுள்ளது.

கடந்த நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன் ஆரம்பமான இசைஞானி இளையராஜாவின் இசைப்பயணம் இப்போது வரை ரசிகர்களின் பேராதாரவுடன் வரவேற்பு குறையாமல் தொடர்ந்து வருகிறது.


இதுவரை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம், மராத்தி என பன்மொழிகளில் அவர் சுமார் 1400க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

உலகிலேயே எடை குறைவான சாட்டிலைட் தயாரிக்கும் தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள் குழு இந்த ஆண்டு இன்னும் அதிக எடையை குறைத்து ஒரு புதிய சாட்டிலைட்டை வடிவமைத்துள்ளது. அதில் இளையராஜாவின் இசை இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இஸ்ரோ உதவியுடன் இளையராஜா இசையமைத்துள்ள பாடல் இடம்பெற்றுள்ள சாட்டிலைட்டை விண்வெளிக்கு அனுப்ப இந்த மாணவர்கள் குழு முடிவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.


கடந்த 75 ஆண்டுகள் நிகழ்ந்த இந்தியாவின் புதுமைகளையும் இனிவரும் காலங்களில் இந்த பாரதம் நம்பர் வன் தேசமாக இருக்கும் என்பதையும் உள்ளடக்கிய பாடலை இளையராஜா இசையமைத்துள்ளார். பாடலை சுவானந்த் கிர்கிரே எழுத இளையராஜா பாடி இசையமைத்துள்ளார். இதன் மூலம் விரைவில் விண்வெளியில் இளையராஜாவின் இசை ஒலிக்க உள்ளது.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வாக்கு திறமை அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். புக்தி தெளிவு உண்டாகும். வழக்குகளில் இருந்து வந்த மந்தநிலை மாறும். எதிர்காலம் பற்றி சிந்தனை அதிகரிக்கும். வீடு மனை சம்பந்தமான விஷயங்களில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் தலை தூக்கும். சாதுரியமாக பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். பெண்களுக்கு எந்த ஒரு விவகாரத்தையும் எதிர் கொள்ளும் மன வலிமை உண்டாகும்.




ரிஷபராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நல்ல பலன்கள் உண்டாகும். இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும். எதை பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கவுரவம் கூடும். தொழில், வியாபாரத்தில் கடன் பிரச்னைகள் குறையும். உத்யோ கஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். சுபச்செலவு உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த சுண.க்க நிலை மாறும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். குடும்பத்தினரிடம் வீண் வாக்குவாதங்களை தவிர்த்து சாதாரணமாக பேசுவது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. பெண்கள் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! சுப பலன் உண்டாகும். எந்த ஒரு வேலையையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பண வரவு அதிகமாகும். பூமி வீடு வாகனங்கள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்பத்தினருக்கு தேவையான விஷயங்களை செய்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை குறையும். உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்க பெறுவர். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.





சிம்மராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்து வெற்றி பெறுவீர்கள். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டு சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்படும். எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது.





கன்னிராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். கணவன், மனைவிக்குள் திடீர் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தன போக்கு காணப்படும். சாந்தமாக உரையாடுவது வியாபார விருத்திக்கு வழி செய்யும். உத் யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாக பேசாமல் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். பிடிவாதத்தை விடுவது நன்மை தரும்.







துலாம் ராசி அன்பர்களே! தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். தெளிவு உண்டாகும். தேவையற்ற பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த தேவையற்ற குழப்பங்கள் சரியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்குள் கருத்து வேற்றுமை ஏற்படலாம். வாக்கு வாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமல் செல்வது நன்மை தரும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விஷயத்திற்காக கூட அலைய வேண்டி இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! கடின உழைப்பினால் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். சுக்கிரன் சஞ்சாரத்தால் பணம் வரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் ஒதுங்கி விடுவர். நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். தைரியம் உண்டாகும். குடும்பத்தில் திடீர் பிரச்னைகள் ஏற்படலாம். குடும்ப செலவுகள் அதிகரிக்கும். ஆயுதங்கள், நெருப்புகள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். பெண்களுக்கு மற்றவர்கள் நலனை அக்கறையுடன் கவனிப்பீர்கள். புத்தி கூர்மையுடன் செயல்படுவது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவும்.





தனுசுராசி அன்பர்களே! பணவரத்து கூடும். வீண் கவலை அகலும். எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். சொத்துக்கள் சார்ந்த பிரச்னைகளில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். திருமண முயற்சியில் சாதகமான பலன் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உங்களது செயல்களுக்கு குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இருக்கும். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக பலன் தரும். உத்யோகஸ்தர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பர். பெண்களுக்கு எதிர்ப்புகள் அகலும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.




மகரராசி அன்பர்களே! எதிர்ப்புகள் அகலும். எல்லா நலன்களும் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. பயணம் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்னைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் லாபம் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சுவையான உணவு கிடைக்கும். மனோ பலம் கூடும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பழைய பாக்கிகள் வசூலாகும். பெண்களுக்கு புதிய நபர்கள் அறிமுகமும் அவர்களால்உதவியும் கிடைக்கும். எடுத்த காரியம் கைகூடும்.




கும்பராசி அன்பர்களே! திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும். பயணங்கள் ஏற்படலாம். ஆன்மீக பணிகளில் நாட்டம் செல்லும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை. வீடு, மனை காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். வாழ்க்கை துணையின் உடல் நலனில் அக்கறை தேவை. சிறிய விஷயங்களுக்கு கூட கோபம் வரலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டும். ஆர்டர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. பெண்கள் பேச்சின் இனிமை சாதுரியத்தால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன் பெறுவர்.




மீனராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். ஆன்மீக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பூமி வீடு லாபம் ஏற்படும். தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வர். பெண்களுக்கு எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்க கூடிய சூழ்நிலை ஏற்படும். திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும். உறவுகள் உங்களை வாழ்த்துவார்கள்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை

# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

**அதிரடி சிறப்பு வட்டி வீதம்**

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7